விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Viber : 076 636 3378

# வலம்புரி

## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கலயாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 கார்த்திகை 21 சனிக்கிழமை (07.12.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 353

## தெற்காசிய விளையாட்டு விழாவின் பளுதூக்கல் போட்டியில் யாழ்.மாணவி ஆர்ஷா சாதனை



(யாழ்ப்பாணம்)
தெற்காசிய விளையாட்டு விழாவின் பளுதூக்கல் போட்டியில், யாழ்ப்பாணத்தை சேர்ந்த 23

## கொடிகாமம் பாலாவியில் வீடு புகுந்து வாள்வெட்டு

### இருவர் படுகாயம்

(கொடிகாமம்)
கொடிகாமம் பாலாவிப் பகுதியில் வீடுபுகுந்து வெட்டியதில் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

இதில் பாலாவி தெற்கு கொடிகாமத்தைச் சேர்ந்தவர்களான சோமசுந்தரம் ரவிதரன் (வயது 30). பாலகிருஷ்ணபிள்ளை கோகுலன் (வயது 30) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் 23

## நல்லூர் பிரதேச சபையின் 2020ஆம் ஆண்டு பட்ஜெட் தோல்வி

(யாழ்ப்பாணம்)
நல்லூர் பிரதேச சபையின் 2020ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் இரண்டு மேலதிக வாக்குகளால் தோல்வியடைந்தது.

நல்லூர் பிரதேச சபையின் 2020ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் நேற்று வெள்ளிக்கிழமை நல்லூர் பிரதேச சபை சபா மண்டபத்தில் தவிசாளர் தாமோதரம்பிள்ளை தியாகமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இவ் பட்ஜெட்டுக்கு இரண்டு மேலதிக எதிர்ப்பினால் சபையில் பட்ஜெட் நிராகரிக்கப்பட்டது.


இதற்கு ஆதரவாக 7 உறுப்பினர்களும் எதிராக 9 உறுப்பினர்களும் 2 பேர் நடுநிலை வகித்தனர். மேலும் இரண்டு உறுப்பினர்கள் பட்ஜெட் கூட்டத்திற்கு வருகை தரவில்லை. (ம-3,10)

# சீரற்ற காலநிலையால்

# வடக்கில் 55 ஆயிரம் பேர் பாதிப்பு

### இரணைமடுவின் 10 வான் கதவுகள் திறப்பு அக்கராயனில் அதிக மழைவீழ்ச்சி பதிவு

(யாழ்ப்பாணம்)
நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக வடக்கில் மட்டும் 55 ஆயிரத்துக்கு அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இரணைமடுக்குளத்தின் நீர்மட்டம் 34.5 அடியாக உயர்வடைந்ததோடு இரணைமடுவின் 10 வான்கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன. மேலும் அக்கராயனில் 238.9 மில்லிமீற்றர் அதிகளவு மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)



## காய்ச்சல் காரணமாக யாழ்.போதனாவில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
காய்ச்சல் காரணமாக குடும்பஸ்தர் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவத்தில் மொனராகலை கடல் கும்புற பகுதியைச் சேர்ந்த ஶ்ரீ திஸாநாயக்க (வயது 30) 23

## இயற்கை அனர்த்தத்தால் வடக்கில் பாதிக்கப்பட்டவர்களுக்கு

### மேலதிகமாக 2 மில்லியன் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)
வட மாகாணத்தில் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான நிவாரணப் பணிகளுக்காக மேலதிகமாக, 2 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதனின் வேண்டுகோளுக்கு அமையவே, இந்த நிதி 23

### யாழ்.பல்கலையின் பட்டமளிப்பு விழா



03

## மோ.சைக்கிளிலிருந்து தவறி விழுந்த ஆசிரியை மரணம்

(யாழ்ப்பாணம்)
மோட்டார் சைக்கிளிலிருந்து தவறிவிழுந்த ஆசிரியை ஒருவர் யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் சிகிச்சை பலனின்றி 23

## லண்டன் தூதரகத்தில் தமிழர்களை எச்சரித்த பிரியங்க குற்றவாளியே

### பிரித்தானிய நீதிமன்றம் தீர்ப்பு

(லண்டன்)
பிரித்தானியாவில் போராட்டத்தில் ஈடுபட்ட இலங்கை தமிழர்களிற்கு அச்சுறுத்தல் விடுத்ததாக குற்றம்சாட்டப்பட்டிருந்த பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ குற்றவாளியென பிரித்தானிய நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. பொது ஒழுங்கு சட்டத்தை மீறியதாக குறிப்பிட்டு, அவரை குற்றவாளியென வெஸ்ட்மின்ஸ்டர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. 2018ம் ஆண்டு இலங்கையின் சுதந்திரதினத்தின் போது, பிரித்தானிய தூதர 23

### தொடர் மழை காரணமாக

## 21 மாவட்டங்களில் 2,35,906 பேர் பாதிப்பு

(கொழும்பு)
நாட்டில் கடந்த 2 ஆம் திகதி தொடக்கம் நேற்று மாலை 6.00 மணி வரையான காலப்பகுதி வரை தொடரும் சீரற்ற வானிலையால் உண்டான அனர்த்தம் காரணமாக 21 மாவட்டங்களில் 70 ஆயிரத்து 957 குடும் 23

### பருத்தித்துறை ஐயனார் பகுதியில்

## பட்டப்பகலில் வீடு உடைத்து பணம், நகை திருட்டு

(கரணவாய்)
வீட்டில் ஆட்கள் இல்லாததை சாதகமாக பயன்படுத்தி பட்டப்பகலில் வீட்டை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த தங்க நகை மற்றும் ஒரு தொகை பணத்தை திருடிச் சென்றுள்ளதாக பருத்தித் 23

## கே.கே.எஸ் கடலில் மாயமான இளைஞன் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை கடலில் குளிக்கச் சென்ற இளைஞரொருவர் கடலில் அடித்துச் செல்லப்பட்டுள்ள நிலையில் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மாத்தறை பகுதியில் இருந்து காங்கேசன்துறை, தல்செவன கடற்பகுதிக்கு சென்றிருந்த செல்வநாயகம் அலெக்சாண்டர் என்ற 21 வயதுடைய இளைஞனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 23

## கணித வகுப்புக்கள்

தரம் 6 மாணவர்களுக்கான கணித வகுப்புக்கள் இன்று ஆரம்பம்

இடம்:
புகையிரத வீதி, இணுவில் கிழக்கு
சனி, ஞாயிறு 6.30 Pm - 7.30 Pm

**Mr. S.Tharshan (J.P)**
**077 454 0529**
(1393)



## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில்உற்பத்திசெய்யப்பட்ட(புறொயிலர்) கல்பேட், ஊர்ச்சேவல் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்**
இல.19, முருகேசர் லேன், நல்லூர்.
(C-8443)


# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் பேராயரிடம் வாக்குமூலம் பதிவு

(கொழும்பு)

ஏப்ரல் 21 பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் கத்தோலிக்க பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை முன்னிலையானார்.

குறித்த பயங்கரவாத தாக்குதல் சம்பவம் தொடர்பில் சாட்சியமளிப்பதற்காக அவர் நேற்று பிற்பகல் 2 மணியளவில் ஆணைக்குழுவில் முன்னிலையானதாகவும்,

அவரிடம் 4 மணி நேரம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (ம-3)


# வாழ்வகம்

## விழிப்புலவலுவிழந்தோர் இல்லம்

## புதிய மாணவர் அனுமதி - 2020

வட மாகாணம், யாழ்ப்பாணம், சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வக நிறுவனத்தில் கண் பார்வையற்ற அல்லது குறைந்த பார்வையுடைய பிள்ளைகளை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் 2020ஆம் ஆண்டுக்காக கோரப்படுகின்றன.

பிள்ளைகளுக்கான உணவு, உடை, தங்குமிடம் மற்றும் கல்விக்கான அனைத்து வசதிகளும் கவின் கலைகள், மேலதிக வகுப்புக்கள், ஆளுமை விருத்திக்கான செயற்பாடுகள், கணனிக்கற்கைகள், தியானம், சுகாதார, மருத்துவ வசதிகள், விளையாட்டு வசதிகள் என்பன முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்டவாறான நிலைமைகளை உடைய இலங்கை வாழ் தமிழ்மொழி பேசும் பிள்ளைகளின் பெற்றோர்கள் எதிர்வரும் 31.12.2019க்குப் பிந்தாமல் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொண்டு தங்கள் பிள்ளைகளின் வளமான எதிர்காலத்துக்கு வழிசமைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

குறிப்பு: பிள்ளைகளை விடுதியில் அனுமதித்து சனி, ஞாயிறு தினங்களில் பெற்றோர் சந்திக்க வசதி செய்வதுடன், பாடசாலை விடுமுறை தினங்களில் விரும்பின், தமது இல்லங்களுக்குச் சென்று வரவும் அனுமதிக்கப்படுவர்.

தொடர்பு:-
தலைவர், வாழ்வகம்,
சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாம்

தொலைபேசி இல:-
021 224 0146,
076 828 6331
(8449)



# வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கவுள்ள தனியார் நிறுவனத்துக்கு கீழ்வரும் பதவிகளுக்கு உடனடி வேலைவாய்ப்புக்கள்.

ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்

- கிளை முகாமையாளர்
- சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள்
- தொலைபேசி பதிலளிப்பாளர்கள் (பகல்/இரவு)
- அலுவலக உதவியாளர்
- வாகன சாரதி
- பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (பகல்/இரவு)

ஆர்வமுள்ளவர்கள் 09.12.2019 திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு 461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள 'யாழ்.முற்றம்' நிறுவனத்துக்கு வருகை தரவும்



**Semba Services (Pvt) Ltd**
551A, Kasthuriyar Road, Jaffna.
077 777 3622 sembaservices@gmail.com
(C-8451)


# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்

## செல்வன் சிவானந்தமூர்த்தி புகலவன்



தாயின் மடியில் 24.08.2009

மண்ணின் மடியில் 07.11.2019

கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கிளி/ஆரம்ப வித்தியாலய மாணவனுமாகிய செல்வன் சிவானந்தமூர்த்தி புகலவன் அவர்கள் கடந்த 07.11.2019 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் 31ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதியபோசனமும் இன்று (07.12.2019) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

2016ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் இருந்து இந்தியா வரை உதவிய வைத்தியர்கள், பணியாளர்கள் மற்றும் இறுதிக் கிரியையில் கலந்து பல்வேறு வழிகளில் உதவிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

புகலவன் வீதி, குளவீதி,
பரவிப்பாஞ்சான், கிளிநொச்சி.

தகவல்:-
குடும்பத்தினர்

(C-8448)

# யாழ்.பல்கலையின் 34 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா



(படங்கள்:-ஐ.சிவசாந்தன்)

# விராட்டின் அதிரடியால் வென்றது இந்தியா

இந்தியா - வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையிலான முதல் டி20 கிரிக்கெட் போட்டி ஐதராபாத்தில் நடைபெற்றது. டாஸ் வென்ற இந்திய அணி கேப்டன் விராட் கோலி பந்து வீச்சை தேர்வு செய்தார்.

அதன்படி வெஸ்ட் இண்டீஸ் அணியில் சிம்மன்ஸ் 2 ரன் எடுத்து ஆட்டமிழந்தார்.

லிவிஸ் 17 பந்தில் 3 பவுண்டரி, 4 சிக்சர்களுடன் 40 ரன்களும், கிங் 31 ரன்னிலும் அடித்து அவுட்டாகினர். அடுத்து இறங்கிய ஹெட்மையர் 41 பந்தில் 2 பவுண்டரி, 4 சிக்சருடன் 56 ரன்கள் அடித்தார். பொல்லார்டு 19 பந்தில் 4 சிக்ஸ், ஒரு பவுண்டரியுடன் 37 ரன் அடித்து ஆட்டமிழந்தார்.

இறுதியில், வெஸ்ட் இண்டீஸ் 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 207 ரன்கள் குவித்தது. ஹோல்டர் 9 பந்தில் 24 ரன்கள் அடித்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதையடுத்து, 208 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் இந்தியா களமிறங்கியது.

ரோகித் சர்மா 8 ரன்னில் அவுட்டாகி அதிர்ச்சி அளித்தார். அடுத்து இறங்கிய கேப்டன் விராட் கோலி ராகுலுடன் சேர்ந்து பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

முதலில் அரை சதம் கடந்த கேஎல் ராகுல் 62 ரன்னில் வெளியேறினார். இவர் கோலியுடன் இணைந்து 100 ரன்கள் சேர்த்தார். ரிஷப் பந்த் 18 ரன்னிலும், ஷ்ரேயஸ் அய்யர் 4 ரன்னிலும் அவுட்டாகினர்.

மறுமுனையில் தூணாக நின்ற விராட் கோலி தனது அதிரடியை தொடர்ந்தார். அவர் இறுதிவரை ஆட்டமிழக்காமல் அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார்.

இறுதியில், இந்தியா 18.4 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 209 ரன் எடுத்து வெற்றி பெற்றது. விராட் கோலி 50 பந்துகளில் 6 சிக்சர், 6 பவுண்டரியுடன் 94 ரன் எடுத்து ஆட்டமிழக்காமல் உள்ளார்.

இந்த வெற்றி மூலம் இந்தியா டி 20 தொடரில் 1-0 என முன்னிலை வகிக்கிறது.

# நிலக்சன் ஞாபகார்த்த தங்கப் பதக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவின் போது ஊடகத் துறையில் சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவருக்கு வழங்கப்படும் தங்கப் பதக்கம் யாழ் பல்கலைக்கழக ஊடக மாணவனும் ஊடகவியலாளருமான அமரர் சகாதேவன் நிலக்சன் ஞாபகார்த்த தங்கப் பதக்கம் இவ் ஆண்டு செல்வி அன்ட்கேசிகா லோறன்ஸ் ராஜ்குமாருக்கு வழங்கப்படுகின்றது.

இன்றைய அமர்வின் போதே தங்கப் பதக்கம் வழங்கப்படவுள்ளது.

நிலக்சனது ஞாபகார்த்தமாக அவருடன் யாழ் இந்துக்கல்லூரியில் ஒன்றாய்க் கற்ற 2004 உயர்தர மாணவர்களால் முன்னெடுக்கப்படும் "நிலா நிதியம்" யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவின் போது ஊடகத்துறையில் சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவருக்கு ஆண்டு தோறும் வழங்கப்படுகிறது.

கடந்த ஆண்டு கோண்டாவில் குமர கோட்டத்தைச் சேர்ந்த யாழ் பல்கலை மாணவியான தினேஸ் விஜயதர்சினி இவ்விருதைப் பெற்றுக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# மரண அறிவித்தல்

தோற்றம்
26 - 07 - 1929



மறைவு
05 - 12 - 2019

## திருமதி பத்மாவதி இரத்தினலிங்கம்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் தொண்டைமானாறு மற்றும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி இரத்தினலிங்கம் (05.12.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம்- தங்கமணி தம்பதிகளின் அன்பு மகளும் தம்பு- மாணிக்கம் தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற தம்பு இரத்தினலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தனலிங்கம் , மகேஸ்வரி மற்றும் துரைலிங்கம் (மலேசியா) ஆகியோரின் அன்பு சகோதரியும் கிருஷ்ணதாஸ் (சாந்தா மோட்டோர்ஸ்), சந்திரதாஸ் (தொண்டைமானாறு), குணசேகரன் (T.Rகுணசேகரன்), ஜெயசேகரன் (பொப்பியூலர் மோட்டோர் ஸ்டோர்ஸ்,முன்னாள் யாழ்.வணிகர் கழகத் தலைவர், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சத்தியவாணி, திலகவதி, டயாமிளா, தேவிகா ஆகியோரின் அன்பு மாமியாரும் கிருஷாந்தன், நிஷாந்தன், அகல்யா, துவர்ஷன், அஷ்வினி, அஸ்மிலா ஆகியே-ாரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (08.12.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(1397)

இல, 127, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:- குடும்பத்தினர்
0776510696,0212223232

# மரண அறிவித்தல்



## தம்பிராசா செல்லம்மா

யாழ் சுதுமலை தெற்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா செல்லம்மா கடந்த 03.12.2019 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தர்-சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வைத்தி - பொன்னு தம்பதிகளின் அன்பு மருமகளும் தம்பிராசாவின் பாசமிகு மனைவியும் ஆவார்.

காலஞ்சென்றவர்களான றீற்ரா (மங்கை), புஸ்பலதா(லதா), மேகலதா (ஜேர்மனி), ஜெயராஜ்(சுவிஸ்), ஜெகதீசன் (ஜேர்மனி), பிறேமலதா (பிரான்ஸ்), ஜெபாநந்(பிரான்ஸ்), சுமலதா( லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

மோகன்ராஜ்(ஜேர்மனி), ஜெசிக்கா(சுவிஸ்), கீதா(ஜேர்மனி) , ஸ்கந்தராஜா (பிரான்ஸ்) ,ரேணுகா(பிரான்ஸ்), சிவகுமார்(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் பரமேஸ்வரி(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் நல்லம்மா, காலஞ்சென்ற மகாலிங்கம்· (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ரோகித், ஊர்ஜனா, றித்திகா, றுக்ஷனா, அஷ்வின், தூரிஹ, தூரிகன், அபிஷன், அஷ்னவி, றக்ஷனா றொனிஷன், அக்ஷயன், றிஷ்மிகா, அஷ்ஜனன், அருஷன், றாஹித், அகிஷன், அஷ்னிகா, அஜிஷ் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(08.12.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் சுதுமலை தெற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

(1398)

தகவல்:-
குடும்பத்தினர்
071 163 9688

# ஆதரவு வழங்கவில்லை என்பதற்காக தமிழ் மக்களை வேறுபடுத்த முடியாது

## இராஜாங்க அமைச்சர் செஹான் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் ஆதரவு வழங்கவில்லை என்பதற்காக அவர்களை வேறுபடுத்திப் பார்க்க முடியாதென இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.**

தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து கொழும்பில் நேற்று ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இடைக்கால அரசாங்கத்தில் மக்களுக்கு தேவையான உரிய சேவை முன்னெடுக்கப்படும்.

மேலும் நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் பொதுவான அபிவிருத்திகளே முன்னெடுக்கப்படும். அத்துடன் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் ஆதரவளிக்கவில்லை என்பதற்காக அவர்களை ஒருபோதும் ஒதுக்கமாட்டோம்.

வடக்கு மற்றும் கிழக்கில் பெரும்பாலான மக்கள் மாறுபட்ட பல கடன் திட்டங்களில் அகப்பட்டு பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளார்கள். நுண்கடன் திட்டங்களில் நெருக்கடியுள்ளாகியுள்ளோருக்கு அரசாங்கம் மாற்று நடவடிக்கைகளை முன்னெடுக்கும்.



மேலும் எதிர்வரும் தேர்தல்களில் பொதுஜன பெரமுனவுக்கே தமிழ் மக்கள் அனைவரும் தங்களின் ஆதரவை வழங்குவார்கள் என்பது உறுதி" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## படவரைஞர்களைப் பதிவு செய்தல்-2020

யாழ்.மாநகர சபையில் கட்டட அனுமதிக்கான வரைபடங்களை வரைந்து சமர்ப்பிக்க விரும்பும் படவரைஞர்கள் மற்றும் புதுப்பித்துக்கொள்ள விரும்புவோர் எதிர்வரும் 30.12.2019 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்பதனை சகல படவரைஞர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**குறிப்பு:** மேற்குறிப்பிட்ட திகதிக்குள் பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறும் படவரைஞர்களது பதிவுகள் இரத்துச் செய்யப்படும்.

**முதல்வர்,**
**யாழ்.மாநகரசபை.**

(C-8441)

## மாநகர எல்லைக்குள் குழாய்க்கிணறு நிர்மாணித்தல்-2020

யாழ்.மாநகர எல்லைக்குள் குழாய்க்கிணறு நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் இதுவரை பதிவு செய்யாத நிறுவனங்கள் மற்றும் 2019 ஆம் ஆண்டு பதிவினை மேற்கொண்ட நிறுவனங்கள் 2020 ஆம் ஆண்டுக்கான பதிவுகளை 30.12.2019 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதுடன் யாழ்.மாநகர சபையில் பதிவினை மேற்கொள்ளாது குழாய் கிணறு நிர்மாணிக்கும் நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**முதல்வர், யாழ்.மாநகரசபை.**

(C-8447)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 06 . 11 . 1952

ஆண்டவன் அடியில் 30 . 11 . 2017

### அமரர் தம்பன் ஐயாத்துரை

திதி: கார்த்திகை மாதம் பூர்வபக்க ஏகதாசி

(07.12.2019)

இரண்டு ஆண்டுகள் மறைந்திருந்தாலும்
உன் நினைவுகள் எம் உள்ளத்திலிருந்து அழியாது
இறைவனை அடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-8433)

காந்தி வீதி,
துன்னாலை மேற்கு,
கரவெட்டி.

தகவல்:
மகன்: ஐ.ரஜனி காந்தன் (C.T.B)
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### அமரர் நவரட்ணம் தனஞ்சயன்



உடுப்பிட்டி இமையாணன் வடக்கை பிறப்பிடமாகவும் இலண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட **நவரட்ணம் தனஞ்சயன்** 13.11.2019 புதன்கிழமையன்று லண்டனில் இறைபதமடைந்தார்.

அன்னார் உசனைச்சேர்ந்த நவரட்ணம்- ஈஸ்வரி (உடுப்பிட்டி) ஆகியோரின் பாசமிகு மகனும், சங்கீதா (ஆசிரியை), சகிலா (கனடா), நிரோசா (ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், மதியழகன், நிகேதன் (கனடா), சிவதர்சன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், இளையதம்பி, யோகம்மா அவர்களின் அன்புப் பேரனும் இந்திராணி, சந்திரா, சச்சிதானந்தம், செல்வரட்ணம் ஆகியோரின் பெறாமகனும், புவனேஸ்வரி, தயாவதி (கனடா), சந்திராதேவி, மல்லிகாதேவி, வைரவநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மருமகனும் நிசானி (கனடா) அவர்களின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 08.12.2019 ஞாயிற்றுக்கிழமை 11.00 மணியளவில் நடைபெற்று அவரது பூதவுடல் தகனக் கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இமையாணன் வடக்கு,
உடுப்பிட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

# நூலகங்களுக்கு நிதியொதுக்கீடு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையினர் 2020 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் தமது ஆளுகைக்கு உட்பட்ட சாவகச்சேரி, நுணாவில் மற்றும் மீசாலைப் பொது நூலகங்களுக்கு கணிசமான நிதியொதுக்கீட்டினை மேற்கொண்டுள்ளனர்.

அந்தவகையில் சாவகச்சேரி பொது நூலக திருத்த வேலைகளுக்கு 1.5 மில்லியன் ரூபாவும் நுணாவில் பொது நூலக பராமரிப்பிற்கு 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் மற்றும் மீசாலை பொது நூலக மேல் மாடிக்கட்டடத்திற்கான மின் இணைப்பு உள்ளிட்ட உட்கட்டுமானப் பணிகளுக்கு இரண்டரை இலட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மாணவர்கள் மற்றும் பொது மக்களின் அறிவுத் திறனை வளர்ப்பதற்கு நூலகங்களை மெருகேற்ற வேண்டும் எனச் சபையில் உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்து வந்த நிலையில் 2020 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட்டில் நகரசபையினர் அதனைக் கவனத்தில் எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(இ-30)

# தேர்தலின் பின்னான அரசியல் அரங்கம் யாழில் நாளை பகிரங்கக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சமூக விழிப்புணர்விற்கான அமைப்பின் ஏற்பாட்டில் "மார்க்சிஸப் பார்வையில் தேர்தலின் பின்னான அரசியல் அரங்கம்" என்னும் தலைப்பிலான பகிரங்கக் கருத்தரங்கு நாளை 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ்.பொது நூலக உணவகத்தில் நடைபெறும். இக் கருத்தரங்கில் கலாநிதி என். ரவீந்திரன் சிறப்புரையாற்றுவார்.(இ-5)

# நெடுந்தீவுக்கு வினாத்தாள்கள் ஹெலியில் அனுப்பிவைப்பு



(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் கடல் கொந்தளிப்பு நிலை காணப்பட்டதால் அங்கு இடம்பெறும் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்குரிய வினாத்தாள்கள் விமானப் படையின் உலங்கு வானூர்தி மூலம் அனுப்பி வைக்கப்பட்டது.

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைகள் கடந்த 2 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 12 ஆம் திகதிவரை இடம்பெறுகிறது.

இதில் நெடுந்தீவு பரீட்சை நிலையத்துக்கான வினாத்தாள்கள் படகுமூலம் அனுப்பி வைக்கப்பட்டு வந்தன.

எனினும் நேற்று கடல் கொந்தளிப்பு நிலை காணப்பட்டதால் உலகுவானூர்தி மூலம் அங்கு வினாத்தாள்கள் அனுப்பி வைக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (இ-7)

# கனவுகளும் பலன்களும்

## கனவில் வைத்தியசாலை வந்தால்

கனவில் ஓர் வைத்தியசாலை தோன்றுமானால் அவ்வாறு கனவு காண்பவர் தமது உடல்நலம் பேணுவதில் கொண்டுள்ள கவனத்தைக் குறிக்கும்.

தனக்கு அறுவைச் சிகிச்சை நடப்பது போல் கனவு கண்டால் பொருளாதார வளர்ச்சிக்கான புதிய முயற்சியில் ஈடுபடும் வாய்ப்பு வரும்.

பறப்பது போல் கனவு காண்பவர்கள் வாழ்வில் மிக உன்னதமான நிலையை அடைவார்கள்.

இதுவரை இருந்து வந்த கஷ்டங்கள் நீங்கும். வாழ்வில் உயரப்போகும் உங்களுக்கு என் வாழ்த்துக்கள். கனவில் அந்தணனைக் கண்டால் நல்லது. குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும். தலப் பயணம் மேற்கொள்ள நேரும். புண்ணிய ஆலய வழிபாடு, புனித நீராடல் நிகழும்.

கனவில் அரசனைக் கண்டாலும் அரசரோடு தொடர்பு கொண்டாலும் நல்ல சொல்வாக்காகும். மதிப்பும் உயர்வும் உண்டாகும். அரசர் போன்ற பெரும் பதவியில் உள்ளோரைக் கண்டாலும் இப்பலன் பொருந்தும்.

அமைச்சரோடு தொடர்பு கொள்வது போன்றோ அல்லது உரையாடுவது போன்றோ கனவு கண்டால் விரைவில் பதவி உயர்வு கிடைக்கும். தொழில் துறையில் உள்ளவர்களுக்குத் தொழிலில் இருந்து வந்த தடைகள் விலகும்.

கனவில் அயல் நாட்டவர் தோன்றினால் அயல்நாட்டு வாணிகத் தொடர்பு உண்டாகும். அயல் நாட்டிலிருந்து பொருள் வரவு உண்டு.

அயல்நாட்டுத் தூதுவரைக் கனவில் கண்டால் புதியவர் ஒருவரின் தொடர்பு உண்டாகும். தாம் அயல்நாட்டுக் தூதுவராக நியமிக்கப்பட்டது போல் கனவு கண்டால் புதிய தொழிலில் அல்லது புதிய வணிகத்தில் ஈடுபடும் வாய்ப்பு உண்டாகும்.

அதிசயமான - விந்தையான மனிதரைக் கனவில் கண்டால் தொழிலில் ஏமாற்றங்கள் உண்டாகும். நம்பிக்கை மோசடி உண்டாக வாய்ப்புண்டாகும்.

அறிஞரைக் காண்பது போலவோ அல்லது அறிஞரோடு உரையாடுவது போலவோ கனவு கண்டால் அறிவுப் பெருக்கம் உண்டாகும்.

காடுகளிலும் மலைகளிலும் வாழக்கூடிய மலைவாசிகள் அல்லது ஆதிவாசிகள் கனவில் தோன்றினால் புதிய புதிய வருமானம் உண்டாகும்.

பழைய கடன் அடைபடும். நாடோடிகளையும் நரிக்குறவர்களையும் கனவில் கண்டாலும் இப்பலன் பொருந்தும். த்ான் வாய்விட்டு அழுது கொண்டிருப்பது போல் கனவு தோன்றினால் எதிர்கால வாழ்க்கையில் இடையூறுகள் உண்டாகும்.

தன்னை அலங்கரித்துக் கொள்வது போலக் கனவு கண்டால் அவ்வாறு கனவு கண்டவ்ர் செய்யும் தொழிலில் நட்டம் ஏற்படும்.

தன்னைப் பிறர் அலங்கரிப்பது போலக் கனவு கண்டால் நண்பரால் நம்பிக்கை மோசடிக்கு ஆளாக நேரிடும். பிறரை அவமரியாதை செய்வது போலக் கனவு கண்டால் கைகூடாமல் இருந்த காரியங்கள் இனி கைகூடிவரும். தன்னைப் பிறர் அவமரியாதை செய்து போலக் கனவு கண்டால் சிறு சிறு தொல்லைகளும் துன்பங்களும் வரக் கூடும்.

தான் பெரியோர்களை அவமரியாதை செய்வது போலக் கனவு கண்டால் அவ்வாறு கண்டவரது முதலுக்கு மோசம் வரும்.

# ஆய்வரங்கம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தின் பால்நிலை வன்முறைக்கு எதிரான 16 நாள் செயற்பாட்டில் பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் சுதந்திரமானதும் பாதுகாப்பானதுமான சூழலை உருவாக்குவோம் என்னும் பொருளிலான ஆய்வரங்கம் நாளை மறுதினம் 9 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் நல்லூர் நாவலர் வீதி, நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.(இ-5)**

# முன்பள்ளி நிகழ்வு நாளை

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு குட்டிச் சுட்டி, அகம் குழந்தைகள் பகல் நேரக் காப்பக மாணவர்களின் வருட இறுதி நிகழ்வுகள் நாளை 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் கோண்டாவில் சந்தி இராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் து.சுதன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண ஆரம்பப்பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பணிப்பாளர் ஜெயா தம்பையா, கோப்பாய், ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை பிரதி முதல் செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன், யாழ். போதனா வைத்தியசாலை மத்திய அதிகாரி கலாநிதி ச.கணேஸ்குமார், தொழிலதிபர் ஈ.எஸ்.பி. நாகரத்தினம், ஓய்வு நிலை அதிபர் கணிதச்சுடர் சண்.வாமதேவன் ஆகியோர் கலந்துகொள்வர்.(இ-5)

# இராசி பலன்

**மீனம்:** எப்படி நடக்குமோ என நினைத்த காரியமொன்று நல்ல விதமாக அமையும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வழிபாட்டில் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மேடம்:** தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும், குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, போசன சுகக்குறைவுகள் ஏற்படலாம்.

**இடபம்:** பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும், வீட்டை அலங்கரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், ஒளிமயமான எதிர்காலம் அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**மிதுனம்:** வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம்.

**கும்பம்:** ஆரோக்கியத்தில் கவனம் தேவை, நன்மைகள் நடைபெறும் நாள், விரதங்களில் நம்பிக்கை கூடும், எதிர்பார்ப்புகள் எளிதில் ஈடேறும் நாள்.

| | | | |
|---|---|---|---|
| சந் | | | ராகு |
| | இராசி பலன் | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் உத்தரம் | | |
| சனி, கேது, சுக், குரு | சூரி, புத | | |

07.12.2019

கார்த்திகை 21, சனிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.15 மணிக்கு

தசமி காலை 6.49 மணிவரை

ரேவதி பின்னிரவு 2.03 மணிவரை

சுபநேரம் 3.17-4.47 மணிவரை

இராகுகாலம் 9.17-10.47 மணிவரை

வளவன்

**கடகம்:** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், உடல் நலன் சீராகும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**மகரம்:** உடன் பிறப்புக்கள் வழியில் சந்தோசம் தரும் செய்திகள் வந்து சேரலாம், நட்பு வட்டம் விரிவடையும் நாள், விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும்.

**சிம்மம்:** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், எடுத் காரியங்கள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.

**தனுசு:** தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், பெற்றோர் மீது பிரியம் கூடும், உறவினர்களிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும்.

**விருச்சிகம்:** இல்லத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**துலாம்:** தெய்வ சிந்தனை மேலோங்கும் நாள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், உடல் நலன் சீராகி உற்சாகப்படுத்தும், பொது வாழ்வில் புகழ்கூடும்.

**கன்னி:** தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பயணத்தால் பலனுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

## வெசாக் விளக்குகள், பட்டம்;

# மிளகு, பாக்கு, புளி உள்ளிட்ட பொருட்கள் இறக்குமதிக்குத் தடை

## நிதி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

மிளகு, பாக்கு, புளி உள்ளிட்ட பொருட்களை இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்கப்பட்டது. நேற்று முன்தினம் (வியாழக்கிழமை) முதல் இவ்வாறு தடை விதிக்கப்பட்டதாக நிதி அமைச்சு தெரிவித்தது.

அத்துடன், கறுவா, சாதிக்காய், வசவாசி, இஞ்சி, ஏலக்காய், மஞ்சள் மற்றும் கராம்பு போன்ற பொருட்களையும் இறக்குமதி செய்ய தடை விதிக்கப்பட்டது.

மேலும், நேரடி மீன் ஏற்றுமதி மற்றும் சிறு தயாரிப்புக்களின் பின்னர் மீன் ஏற்றுமதி செய்யும் நோக்கில் மசாலாப் பொருட்களையும் இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கழிவுப் பொருள் மீள் ஏற்றுமதி வெசாக் விளக்குகள் மற்றும் பட்டம் என்பனவற்றின் இறக்குமதிக்கும் உடனடி தடை விதிக்கப்பட்டது. (இ-7)


## கூறுவிலை கோரல்

தென்மராட்சி பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் கொத்தணி வரணியால் (வரணி வடிசாலை) நடாத்தப்படும் மதுசார உற்பத்தி தொழிற்சாலையின் பானை முறையிலான வடிகலன் பொறித் தொகுதியை 2020ஆம் ஆண்டில் முழுமையாக தொழிற்படும் வகையில் திருத்தம் செய்வதற்கான கூறுவிலையினை இத்துறை சார்ந்த தொழில்நுட்ப நிறுவனங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

ஏற்கனவே உள்ள இயந்திர உபகரணங்களை பார்வையிட்டு திருத்தத்திற்கான கூறுவிலையினை (அலுவலக வேலை நாட்களில் பார்வையிட்டு) தலைவர் தென்மராட்சி பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் கொத்தணி, வரணி என்ற முகவரிக்கு 20.12.2019 ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ அல்லது பதிவுத்தபாலிலோ மூடி ஒட்டிய நிலையில் ஒப்படைக்க முடியும் என்பதனை அறியத்தருகின்றேன். தெரிவுகள் அனைத்தும் நிர்வாக சபை உறுப்பினர்கள் முன்னிலையில் தெரிவு செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்டவருக்கு எம்மால் அறிவித்தல் வழங்கப்படும். (சி-8442)

தலைவர் - க.துரைசிங்கம்


## தொடரும் மழை

# தொண்டைமானாறு கடல் நீரேரியின் அனைத்து வான் கதவுகளும் திறப்பு



(கரணவாய்)

தொண்டைமானாறு கடல் நீரேரியின் அனைத்து வான்கதவுகளும் நேற்றுத் திறந்து விடப்பட்டன.

தொடர்ச்சியாக மழை பெய்வதன் காரணமாக தொண்டைமானாறு நீர்த்தேக்கத்தின் வான் கதவுகள் அனைத்தும் திறக்கப்பட்டன. இந்த நீர்த்தேக்கத்தின் நான்கு வான்கதவுகள் அண்மையில் திறக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் தொடர்ச்சியாக மழை பெய்வதனால் அணைக் கட்டுக்கள் உடைப்பெடுக்கும் அபாயம் ஏற்படுவதை தடுக்கும் முகமாக நேற்று அனைத்து வான்கதவுகளும் திறந்து விடப்பட்டன. (இ-60)

# தாடிக்காக வேலை மறுக்கப்பட்ட சீக்கியருக்கு ரூ.6 லட்சம் இழப்பீடு

(லண்டன்)

தாடிக்காக வேலை மறுக்கப்பட்ட சீக்கியர் ராமன் சேதிக்கு ஹோட்டல் நிறுவனம் 7 ஆயிரத்து 102 பவுண்டு (இந்திய மதிப்புப்படி சுமார் ரூ.6 இலட்சத்து 67 ஆயிரம்) இழப்பீடாக வழங்க வேண்டும் என்று தீர்ப்பளித்தார்.

லண்டன் நகரில் உள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்று, கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு, வேலைக்கு ஆட்களை தேர்வு செய்ய ஏஜெண்ட் மூலம் நேர்காணல் நடத்தியது. அதில், நியூசிலாந்து நாட்டை சேர்ந்த சீக்கியர் ராமன் சேதி என்பவரும் கலந்துகொண்டார். அப்போது, அவர் தாடி வைத்திருப்பதாக கூறி வேலைக்கு சேர்க்க அவர்கள் மறுத்து விட்டனர். இதனால் மனவேதனை அடைந்தராமன், அங்குள்ள வேலைவாய்ப்பு நடுவர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். அதை விசாரித்த நீதிபதி, "நட்சத்திர ஹோட்டல் நிறுவனம், வேலைக்கு ஆட்களை தேர்வு செய்யும்போது, வேலைக்கு வருபவர்கள்




சீக்கியர்களாக இருக்கக்கூடாது என்றோ அல்லது நீளமான முடி, தாடி வைத்து இருக்கக்கூடாது என்றோ எந்த ஒரு அறிவிப்பையும் வெளியிடவில்லை. எனவே, ஹோட்டல் நிறுவனம் 7 ஆயிரத்து 102 பவுண்டு (இந்திய மதிப்புப்படி சுமார் ரூ.6 இலட்சத்து 67 ஆயிரம்) இழப்பீடாக ராமன் சேதிக்கு வழங்க வேண்டும் என்று தீர்ப்பளித்தார். அந்த இழப்பீட்டு தொகையை இங்கிலாந்தில் உள்ள சீக்கியர் தொண்டு நிறுவனத்துக்கு கொடுக்கப்போவதாக பாதிக்கப்பட்ட ராமன் சேதி தெரிவித்தார். (ஜ-2)

# நீர்க் கட்டணத்தில் திருத்தம் வேண்டும்

(கொழும்பு)

தற்போதைய நிலையில் நீர்க் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ள வேண்டிய தேவைப்பாடு உள்ளதாக இராஜாங்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)


PEOPLE'S BANK

## தங்கநகை ஏலவிற்பனை அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.10.2018 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் - 21.12.2019 (சனிக்கிழமை), 22.12.2019 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய திகதிகளில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ்.ஸ்ரான்லி வீதி கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் | நகை மீளெடுப்பதற்கான இறுதி திகதி | ஏலவிற்பனை நடைபெறும் இடமும் திகதியும் |
|---|---|---|---|
| யாழ்.ஸ்ரான்லி வீதி | கொக்குவில் (நாவலர் வீதி) மானிப்பாய் | 20.12.2019 | 21.12.2019 (சனிக்கிழமை) 22.12.2019 (ஞாயிற்றுக் கிழமை) யாழ்.ஸ்ரான்லி வீதி கிளை |
| தெல்லிப்பளை | மல்லாகம் | | |
| | காங்கேசன் துறை | | |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் | | |
| ஊர்காவற்றுறை | — | | |
| நெல்லியடி | — | | |
| அச்சுவேலி | புத்தூர் | | |
| சங்கானை | பண்டத்தரிப்பு | | |
| சுன்னாகம் | கோப்பாய் | | |
| | அளவெட்டி | | |
| சாவகச்சேரி | கைதடி | | |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி | | |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி | | |
| | கல்வியங்காடு | | |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் | | |
| பருத்தித்துறை | புலோலி | | |
| கொடிகாமம் | — | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப்போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்திய தலைமையகம்,
இல:.82, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (C-8284)

தொ.பே.இல: 021 222 2601/ 021 222 8602
தொலைநகல்: 021 222 2602
E.mail: jafrho@peoplesbank.lk



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## ஏலவிற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் விலங்கு விஞ்ஞானப் பண்ணை, அறிவியல்நகர், கிளிநொச்சியில் பின்வரும் கால்நடைகள் 18.12.2019 அன்று புதன்கிழமை ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஆடுகள்:-

| அடையாள இலக்கம் | இனம் | வயது | கடா/மறி |
|---|---|---|---|
| 0003 | சானன் | 4வருடங்கள் | கடா |
| 0008 | சானன் | 2.8வருடங்கள் | கடா |
| 0009 | ஜமுனாபாரிகலப்பு | 2.2 வருடங்கள் | கடா |
| 0010 | ஜமுனாபாரிகலப்பு | 2.1வருடங்கள் | கடா |

செம்மறிஆடுகள்:-

| அடையாள இலக்கம் | இனம் | வயது | கடா/மறி |
|---|---|---|---|
| 0002 | பானுார் கலப்பு | 3.3வருடங்கள் | மறி |
| 0004 | ரெட்மெட்ராஸ் | 3.3வருடங்கள் | மறி |
| 0008 | ரெட் மெட்ராஸ் | 3.3 வருடங்கள் | மறி |
| 0009 | பானுார் கலப்பு | 3.3 வருடங்கள் | கடா |
| 0010 | பானுார் கலப்பு | 3.3 வருடங்கள் | கடா |
| 0012 | ரெட் மெட்ராஸ் | 2.11 வருடங்கள் | கடா |
| 0013 | ரெட் மெட்ராஸ் | 3.0 வருடங்கள் | கடா |
| 0022 | ரெட் மெட்ராஸ் | 1.5 வருடங்கள் | கடா |
| 0024 | பானுார் கலப்பு | 0.7வருடங்கள் | கடா |

மாடுகள்:-

| அடையாள இலக்கம் | இனம் | வயது | நாம்பன் /பசு |
|---|---|---|---|
| 0003 | சகிவால் | 3.9வருடங்கள் | பசு |
| 0007 | ஜேர்சிகலப்பு | 2.09 வருடங்கள் | நாம்பன் |
| 0011 | ஜேர்சிகலப்பு | 1.03 வருடங்கள் | நாம்பன் |

இவ் ஏலவிற்பனையில் கால்நடைகளை வாங்குவதற்கு விரும்புவோர் 16.12.2019 (திங்கட்கிழமை) 10.30 மணிக்கு விவசாயபீடத்தின் விலங்கு விஞ்ஞானப் பண்ணை, அறிவியல்நகர், கிளிநொச்சியில் கால்நடைகளைப் பார்வையிடலாம்.


ஏலவிற்பனையானது 18.12.2019 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு விவசாய பீடத்தின் விலங்கு விஞ்ஞானப் பண்ணை, அறிவியல்நகர், கிளிநொச்சியில் நடைபெறும்.

ஏலத்தில் வெற்றிபெறும் ஏலதாரர் தாம் கொள்வனவு செய்த கால்நடைகளுக்கான முழுத்தொகையையும் உடனடியாகச் செலுத்தி அன்றையதினமே கால்நடைகளை கொண்டு செல்ல வேண்டும்.

பதிவாளர் (சி-8437)

# ஜனாதிபதி கோட்டாபயவை கொல்லச்சதி; உரிய தகவல்கள் கிடைத்தவுடன் நடவடிக்கை

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் உறுதி



(கொழும்பு)

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை கொலை செய்வதற்கு சதித்திட்டம் தீட்டப்பட்டதாகக் கூறப்படுகின்றமை தொடர்பில் உரிய தகவல்கள் கிடைக்கப் பெற்றவுடன் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ உறுதியளித்தார்.**

சீன அரசாங்கத்தின் நிதியுதவியில் இலங்கைக்கு வழங்கப்பட்ட 75 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான 187 மோட்டார் சைக்கிள்களை நாடளாவிய ரீதியிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு பகிர்ந்தளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள பொலிஸ் காலாட்படை தலைமையகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இலங்கைக்கான சீனத் தூதுவர் மற்றும் பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# தொழில் சந்தையை இலக்கு வைத்து ஹோட்டல் பாடசாலை அமைக்க ஜனாதிபதி கோட்டாபய ஆலோசனை

(கொழும்பு)

கல்வித் துறையில் விரைவில் பல மாற்றங்களை ஏற்படுத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கவனம் செலுத்தியுள்ளார்.

உயர்தரப் பரீட்சை முடிவுகள் வெளிவந்தவுடன் மாணவர்களைப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

அத்துடன் வெற்றிடமாகவுள்ள நிறுவனங்களை ஆராய்ந்து பட்டதாரிகளைப் பயிற்சியுடன் இணைத்துக் கொள்வது தொடர்பில் ஜனாதிபதி அவதானம் செலுத்தியுள்ளார்.

நாட்டுக்கும் பொருளாதாரத்திற்கும் பொருத்தமான வகையில் அதிகாரிகளை உருவாக்குவது மற்றும் அதற்கான நடவடிக்கைகளைத் தயாரித்தமை தொடர்பில் ஜனாதிபதி அவதானம் செலுத்தியுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

உயர்தரத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு உயர் கல்வி சந்தர்ப்பம் ஏற்படுத்தல், தகவல் தொழில்நுட்பத்திற்கு முதன்மை இடம் வழங்குதல் தொடர்பில் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தியுள்ளார்.



அத்துடன் தொழில் சந்தையை இலக்கு வைத்து விஞ்ஞான பீடம் ஹோட்டல் பாடசாலை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தை கைவிடாமல் தேசிய பல்கலைக்கழக கட்டமைப்பாக்கி தேசிய வளமாக பயன்படுத்துவது அவசியம் என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (இ-7)

# கலு சாகரவின் உதவியாளர் ஹெரோயினுடன் நேற்றுக் கைது

(குருநாகல்)

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுவொன்றின் உறுப்பினரொருவரின் வழிகாட்டலில் ஹெரோயின் வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த நபரொருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார். ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பில் தேடப்பட்டு வரும் சமிந்த ரோஹண மஞ்சு என்ற கலுசாகர என்ற நபரின் உதவியாளர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவல் ஒன்றின்படி குருநாகலில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது. குறித்த சந்தேகநபர் போதைப் பொருள் வியாபாரம் மட்டுமின்றி கொலன்னாவை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று தொடர்பில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட நபர் என பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர். (இ-7)

# புதிய குறிக்கோளுடன் முன்னோக்கிப் பயணிக்கும் இலங்கைக்கு ஆஸி அரசாங்கம் பூரண ஒத்துழைப்பு வழங்கும்

## உயர்ஸ்தானிகர் உறுதி

(கொழும்பு)

இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் டேவிட் ஹொலி (David Holly) நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்தார்.

அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் சார்பில் ஜனாதிபதிக்கு வாழ்த்துத் தெரிவித்த அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர், புதிய குறிக்கோளுடன் முன்னோக்கிப் பயணிக்கும் இலங்கைக்கு அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் உயர்ந்தபட்ச ஒத்துழைப்பை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவிற்கு மிடையிலான இருதரப்பு தொடர்புகளை மேலும் பலப்படுத்தி முன்னெடுத்துச் செல்வது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (இ-7)

# குளவிக் கொட்டுக்கு இலக்கான இருவர் வைத்தியசாலையில் அனுமதி

(கொடிகாமம்)

குளவிகள் கொட்டியதில் பாதிக்கப்பட்ட இருவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் மந்துவில் மேற்கில் இடம்பெற்றது. இதன்போது க.பொ.சாதாரண தரப் பரீட்சை எழுதிவிட்டு வந்து வீட்டிற்கு சென்று கொண்டிருந்த சுகுமாரன் பிரயாணன் (வயது -16) என்ற மாணவனும் வேலு ப்பிள்ளை இளையதம்பி (வயது-69) என்ற வயோதிப ருமே குளவிக் கொட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.மரத்திலிருந்த குளவிக் கூட்டைக் எரிக்க முற்பட்ட போதே குளவிகள் கலைந்து மேற்படி இருவரையும் கொட்டியமை குறிப்பிடத்தக்கது. (இ-7-114)

# ஜனாதிபதி கோட்டாபய அதிரடி நடவடிக்கை மைத்திரியின் சகோதரரின் சம்பளம் குறைப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் தலைவரின் சம்பளத்தை உடன் அமுலுக்கு வரும் வகையில் குறைக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவிட்டதாகத் தெரியவருகிறது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தம்பியான குமாரசிங்க சிறிசேன, ரெலிகொம் நிறுவனத்தின் தலைவராகச் செயற்பட்டு வருகின்றார்.

தற்போது 20 இலட்சம் ரூபாய் சம்பளம் வழங்கப்பட்டு வரும் நிலையில், அதனை இரண்டரை இலட்சமாக குறைக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டது.

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் புதிய அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்த நிலையில், அரச நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் நீக்கப்பட்டனர்.


எனினும் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் தலைவராக இன்னமும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சகோதரரே செயற்பட்டு வருகின்றார்.

தன்து சகோதரரின் பதவியைப் பாதுகாக்குமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரிக்கை விடுத்ததாகத் தெரியவருகிறது.

எனினும் ரெலிகொம் நிறுவனத்திற்குத் தகுதியான மற்றும் அனுபவம் கொண்ட ஒருவரை நியமிப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என குறித்த ஊடகம் மேலும் தெரிவித்தது. (இ-7)



# 'பாவிகளை மன்னிப்பீராக!'



(04.12.2019 தொடர்ச்சி...)

உள்ளம் வருந்துகிறது. நாட்டில் நடக்கும் ஓர் பிழையை சுட்டிக்காட்டுவதற்காய், "உகரம்" இணைய சஞ்சிகையில், **(uharam.com)** நான் எழுதத்தொடங்கிய கட்டுரையின் நோக்கத்தை, சிலர் தவறாகப் புரிந்து கொண்டு, கட்டுரைக்கும் எனக்கும் வேறு சாயம்பூச முற்படுகின்றனர். நிச்சயமாக நான் கிறிஸ்தவ மதத்தின் எதிரியல்லன். கிறிஸ்தவமதத்திற்கு என்றில்லை வேறு எந்த மதத்திற்கும் நான் எதிரியல்லன். என்னுடைய மதமான இந்துமதம், எந்தமதத்தையும் வெறுக்க எனக்குக் கற்றுத்தரவில்லை. நான் பூணுகிற விபூதி, பொட்டு, காவி என்பவற்றை வைத்து, என்னை ஒரு இந்துமதத் தீவிரவாதியாகக் கற்பனைபண்ணிக் கொண்டு, நான், எழுதுவது கிறிஸ்தவ மதத்தைத் தாக்கவே என முடிவு செய்த சிலர், கட்டுரை பற்றிய குறிப்புகளிலும் தனிப்பட்ட கடிதங்களிலும், என்னை மகிழ்விப்பதாய்க் கருதி, கிறிஸ்தவ மதத்தைக் கேவலப்படுத்தி எழுதுகின்றனர். எனக்கு அதில் உடன்பாடில்லை.

காலம் கடந்து நிலைத்து, மக்களால் பின்பற்றப்படும் எல்லா மதங்களும் உயர்ஞானிகளால் உருவாக்கப்பட்டவையேயாம். அந்த ஞானிகள் மக்களின் ஆத்மவளர்ச்சி நோக்கியே, தத்தம் மதக்கொள்கையை உருவாக்கி வளர்த்தனர். உலகியற்பற்று நீக்கி மக்கள் இறையைச் சார்வதற்காய், அந்த ஞானிகளால் உருவாக்கப்பட்ட மதங்களைப் பின்பற்றுவோர் சிலர், பற்று நீக்க வகுக்கப்பட்டதான தமது மதத்தின் மீதே பற்று வைத்து, 'எனது மதம்தான் உயர்ந்தது மற்றைய மதங்கள் தாழ்ந்தவை" என, ஆணவ முனைப்பால் போராடத் தலைப்படுகின்றனர். அத்தகைய போராட்டங்கள் எம்மதத்தில் உருவானாலும், அதில் எனக்குச் சம்மதமில்லையாம்.

அச்சம்மதமின்மையின் வெளிப்பாடாகவே, இக்கட்டுரையை எழுதத் தொடங்கினேன். ஒருமதம் தனது ஆன்மீகபலத்தினால் பரவுவதை, தவறென்று ஒருநாளும் நான் சொல்லமாட்டேன். அதைவிடுத்து உலகியற்பலம் கொண்டு, மதம் பரப்பப்படுவதிலேயே எனக்கு முரண்பாடு. எனது இந்நோக்கத்தை அறிந்து எந்த மதத்தையும் இழிவு செய்யாமல், தமது கருத்துக்களைப் பதிவு செய்யவேண்டும் என, வாசகர்களைத் தாழ்மையாய்க் கேட்டுக் கொள்கிறேன். இனி, சென்ற வாரக் கட்டுரை தொடர்கிறது.

(சென்ற வாரம்)

இந்துக்கள், பௌத்தர்கள், இஸ்லாமியர்கள் என்ற இம்மதத்தவர்களிலிருந்து வேறுபட்டு, நம்நாட்டுக் கிறிஸ்தவர்கள் மட்டும், மதமாற்றப் பிரசாரத்தைப் பெரிய அளவில் முன்னெடுத்து, மற்றைய மதத்தவரை வெளிப்படையாய் விழுங்க முற்படுவதோடு, இத்தேசத்திற்கு ஆபத்தான மதவெறி என்ற விஷத்தை ஊட்டி, இனபேதம் போல மதபேதம் ஒன்றையும் உருவாக்கி, இந்நாட்டு மக்களை பிரிக்க முயல்வது, மிகுந்த மனவருத்தத்தினைத் தருகிறது. அதுபற்றியே இக்கட்டுரையில் விபரிக்கப்போகிறேன்.

உயர்வான நமது இலங்கை நாட்டில், சிறுபான்மை இனமாய்க் கருதப்படும் தமிழினத்தின் உட்பிரிவுகளாய், மூன்று மதப்பிரிவுகள் அமைந்திருக்கின்றன. இந்துமதம், கிறிஸ்தவ மதம், இஸ்லாமியமதம் என்பனவே அவையாம். இலங்கையின் தமிழ்ச்சிறுபான்மை இனத்தின், மேற்குறிப்பிட்ட மூன்று மதப்பிரிவினர்களுக்கிடையில், இந்துமதம் தனக்கான சில தனித்துவங்களைக் கொண்டிருக்கிறது. அது பற்றிப் பின்னர் விபரிக்கிறேன். 3 மேற்குறிப்பிட்ட மதங்களுள் கிறிஸ்தவ மதமும் இஸ்லாமிய மதமும், தமிழர்களை தமது உறுப்பினர்களாகக் கொண்டிருக்கும் அதேவேளை, சிங்களவர்களையும் தம் மதத்துள் உட்கொண்டு நிற்கின்றன. சிங்களம் பேசும் கிறிஸ்தவர்கள், சிங்களம் பேசும் இஸ்லாமியர்கள் என்பதாய், சிங்களப் பகுதிகளுள் மேற்குறிப்பிட்ட மதக்குழுவினர் வாழ்ந்து வருவது வெளிப்படை. பேரினத்தார் வாழும், வடக்கு, கிழக்குத் தவிர்ந்த மற்றைய பகுதிகளில், மதத்தால் கிறிஸ்தவத்தையும் இஸ்லாமையும் தழுவி, மொழியால் சிங்களவர்களாகவே வாழ்கின்ற பலரை நம்நாட்டில் காணலாம்.

இஸ்லாமிய மதத்தாரைப் பொறுத்தவரை, அவர்கள் தம்மை இஸ்லாமிய மதம் கொண்டு இனங்காட்டுவார்களே அன்றி, எந்த மொழியையும் கொண்டு தம்மை இனங்காட்டுவதில்லை. அதனால் அவர்கள் எங்கு வாழ்ந்தாலும் என்ன மொழி பேசினாலும், தம்மை இஸ்லாமியர்களாகவே அடையாளப்படுத்துகின்றனர். அதனாற்றான் மத முரண்பாடுகள் வருகின்ற பொழுது, சிங்களப் பகுதிகளில் வாழும் இஸ்லாமியர்களும், பேரினத் தீவிரவாதிகளால் தாக்கப்படுவது வழக்கமாகியிருக்கிறது.

மதக்கிரியைகளைப் பொறுத்தவரை இஸ்லாமியர்கள், அரபுமொழியையே தமது வழிபாட்டுமொழியாய்ப் பயன்படுத்துகின்றனர். அதில் என்றும் எங்கும் அவர்கள் மாறுபடுவதில்லை. சிங்களவர்களோடு சிங்களம் பேசி வாழ்ந்தாலென்ன? தமிழர்களோடு தமிழ்பேசி வாழ்ந்தாலென்ன? அவர்களது பள்ளிவாசலில் நடக்கும் வழிபாடு, அரபுமொழியை அடிப்படையாய்க் கொண்டதாகவே அமைந்திருக்கும். அம்மதத்தாரின் நிர்வாகத்தில், சிங்கள இஸ்லாமியத்தலைமை, தமிழ் இஸ்லாமியத் தலைமை என்ற பிரிவுகள் இருப்பதில்லை. இது அவர்களின் உறுதிப்பட்ட மதநிலைப்பாடாம்.

கிறிஸ்தவ மதத்தார் தம் நிலை அப்படியானதன்று. அவர்கள் எந்தச் சூழலில் வாழ்ந்து எம் மொழியைப் பேசுகிறார்களோ, அம்மொழியைச் சார்ந்தே தம்மை அடையாளப்படுத்துகின்றனர். சிங்களப்பகுதிகளில் தம்மை சிங்களக் கிறிஸ்தவர்களாக அடையாளப்படுத்தும் இவர்கள், தமிழ்ப்பகுதிகளில் தம்மை தமிழ்க் கிறிஸ்தவர்களாக அடையாளப்படுத்துகின்றனர். இந்நிலைப்பாடு கிறிஸ்தவ மதத்தினது நிர்வாக நிலையிலும் பேணப்படுகிறது. வடக்கிலும் கிழக்கிலும் இருக்கும் கிறிஸ்தவ மத நிர்வாகத்தில், மதத்தின் உயர்பதவியான ஆயர் பதவியில், தமிழ் பேசும் ஆயர் ஒருவரே இருப்பார். அது போலவே பேரினத்தார் வாழும் பகுதிகளில், சிங்கள ஆயர் ஒருவரே அம்மதத்தாருக்குத் தலைமை தாங்குவார்.

கடுமையான போர்க்காலத்தில் வடக்கிலும் கிழக்கிலும் இருந்த கிறிஸ்தவ மதத்தலைவர்கள், போராளிகளை ஆதரித்தும் அனுசரித்தும் அவர்தம் தொடர்போடு வாழ்ந்தனர். அதுமட்டுமன்றி போராட்டத்தை அவர்கள் கடுமையாக ஆதரிக்கவும் செய்தனர். அதேநேரத்தில் சிங்களப்பகுதிகளில் இருந்த கிறிஸ்தவ மதத்தலைவர்கள், பேரினத்தாரின் உணர்வுசார்ந்தே இயங்கிக் கொண்டிருந்தனர். இங்ஙனமாய் 'மீனுக்குத் தலையும் பாம்புக்கு வாலும்" காட்டி இயங்கி, இருசாராரினதும் ஆதரவைப் பெற்று தம்மதத்தை வளர்ப்பதில், இவர்கள் என்றுமே சமர்த்தர்களாய் இருந்தனர் - இருக் கின்றனர்.

இந்த ஆயர் பதவியில் கூட பெரும்பான்மை நோக்கிய வேறுபாடு இருந்தது. தலைநகர் சார்ந்த பெரும்பான்மை பங்குகளை உடைய கிறிஸ்தவத் தலைவர், ஆயர் என்று அழைக்கப்படாமல் பேராயர் என்றே அழைக்கப்பட்டார். இப்பேராயர் பதவியில் இதுவரை தமிழர் எவரும் இருந்ததாய் தெரியவில்லை. எல்லோர்க்கும் பொதுவான மதமாய்த் தம் மதத்தைக் காட்டிக்கொண்டு, பெரும்பான்மை இனத்தாரைத் திருப்திப்படுத்தும் இவர்தம் ராஜதந்திரத்தின் வெளிப்பாடாகவே, இப்பதவியில் இதுவரை தமிழர்கள் அமர்த்தப்படாததைக் கருதவேண்டியிருக்கிறது. இன்று இப்பேராயர் பதவியில் இருப்பவர், போப் ஆண்டவரைத் தேர்ந்தெடுக்கும் தகுதி கொண்ட குழுவின்ரில் ஒருவராய், 'கர்தினால்" பதவி பெற்று உயர்வு கொண்டுள்ளார். இதுதவிர, இலங்கைக்கான கிறிஸ்தவ தலைமைகளை நெறிப்படுத்தவென, போப் ஆண்டவரால் நியமிக்கப்படும் 'நன்சியோ" என ஓர் பதவி நிலையும் உண்டு என்கிறார்கள்.

இதில் வேடிக்கை என்னவென்றால், நம்நாட்டின் இனப்பிரச்சினையைப் பொறுத்தவரை, சிங்களப்பகுதிகளிலும் தமிழ்ப்பகுதிகளிலும், தனித்தனிக் கொள்கைகளோடு இயங்கும் ஆயர்களை, மேற்படி உயர் பதவித் தகுதி நிலை பெற்றோர் எவரும்; 'எல்லோரும் ஒருநிலைப்பாட்டுக்குள் வாருங்கள்" என்று, கட்டுப்படுத்தியதாய் வரலாறு இல்லை.

இங்ஙனமாய் ஒரு தலைமைக்குள் இயங்கும் இரு பிரிவினர், பிரிவுபட்ட கொள்கைகளோடு தத்தம் பிரதேசத்தில் இயங்க அனுமதிக்கப்படுவதன் நோக்கம், எல்லாப் பகுதிகளிலும் தமது மதத்தை வலிமைப்படுத்துவதேயாம். ஒருதலைமை, இருவேறு கொள்கை என இயங்கும் இவர்கள், தமது மதச்செயற்பாடுகளைப் பொறுத்தவரை என்றும் ஒன்றுபட்டே நிற்கும் விநோதம், மதம் பரப்பும் நோக்கத்துடன் கூடியது என்பது சொல்லாமலே எவர்க்கும் புரியும்.

இவர்களது இவ் இருநிலைப்பட்ட போக்கையும் அதன் நோக்கத்தையும், அரசாங்கமும் போராளிகளும் அறிந்திருந்தபோதும், அம்மதத்தாரின் உலகளாவிய விரிந்த அரசியல், பொருளாதாரம் சார்ந்த செல்வாக்கை, அவ்விருவராலும் நிராகரிக்க முடியவில்லை. அதனால் இம்மதத்தார் தம் இருமைப் போக்கு, வெற்றியாக இம் மண்ணில் ஓடிக்கொண்டிருந்தது. இன்றும் ஓடிக் கொண்டிருக்கிறது. (தொடரும்...)

**கம்பவாரிதி இ.ஜெயராஜ்**


## கொட்டித் தீர்த்த கனமழை

# மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு


- குளங்களின் வான் கதவுகள் திறப்பு
- நீரில் மூழ்கியது பல கிராமங்கள்
- மக்கள் நலன்புரி நிலையங்களில் தஞ்சம்
- வீதிகளில் வெள்ளம் பாய்வதால் போக்குவரத்து தடை
- பரீட்சைக்குச் செல்லும் மாணவர்கள் பெரும் பாதிப்பு
- மீட்புப் பணியில் பொலிஸார் மற்றும் முப்படையினர்

**அண்மைய நாட்களாக பெய்து வரும் கனமழை காரணமாக வடக்கில் பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை முதல் நேற்றுக் காலை வரை கொட்டித் தீர்த்த மழை காரணமாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது.**





### கிளிநொச்சி

கிளிநொச்சியில் ஆறாயிரத்து 841 குடும்பங்களைச் சேர்ந்த 22 ஆயிரத்து 262 பேர் மழையால் பாதிக்கப்பட்டுள்ளனர். கண்டாவளைப்பிரதேசத்தில் பாரிய வெள்ள அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக க.பொ.த.சாதாரண தரப்பரீட்சை மண்டபம் மற்றும் கோட்டக்கல்வி அலுவலகம், பரீட்சை இணைப்பு நிலையம் என்பன வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

கல்மடுக்குளம் 2 அடி 6 அங்குலத்திற்கு மேலாக வான் பாய்வதனால் வெளியேறும் நீரினால் தர்மபுரம், புளியம்பொக்கணை, நெத்தலியாறு போன்ற கிராமங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. இதே வேளை பெருமளவான வர்த்தக நிலையங்களும் நீரில் மூழ்கிக் காணப்படுகின்றன.

பூநகரிப் பகுதியில் உடைப்பெடுக்கும் ஆபத்திலிருந்த 10 குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன. முக்கொம்பன், கிராஞ்சி பகுதிகளிலுள்ள குளங்களின் அருகிலுள்ள மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

### முல்லைத்தீவு

முல்லைத்தீவு மாவட்டத்தில் 323 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 60 பேர் வெள்ளத்தால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வட்டுவாகல், செல்வபுரம், கள்ளப்பாடு, தீர்த்தக்கரை உள்ளிட்ட மாவட்டத்தின் கரையோரப்பகுதிகளுக்குள் வெள்ள நீர் புகுந்துள்ளது. இதனால் மக்கள் பலத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு வரையான ஏ-35 வீதியில் 28 ஆவது கிலோ மீற்றர் பகுதியில் (வள்ளிபுனம் காளி கோவிலடி) பாலம் ஒன்றில் ஏற்பட்டுள்ள பாதிப்பு நிலைகள் மற்றும் வீதியைக் குறுக்கறுத்து வெள்ளம் பாய்வதால் போக்குவரத்து முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

முத்தையன்கட்டு பகுதியில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 30 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 75 பேர் வரையில் பாடசாலையில் தஞ்சம் புகுந்துள்ளனர். முத்தையன்கட்டு குளத்தின் வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன. எனவே அதன் கீழ் இருக்கின்ற மக்களையும் அவதானமாக இருக்குமாறு கோரப்படுகின்றனர். மொத்தமாக 4 வான்கதவுகள் இருக்கும் நிலையில் இரண்டு வான்கதவுகள் சுமார் அரை அடிவரை திறந்து விடப்பட்டுள்ளது.

முறிப்புக்குளத்தின் பிரதான ஆறு பெருக்கெடுத்து குமுழமுனை பிரதான வீதியை மூடியுள்ளது. முறிப்புக் குளத்தின் கீழான வயல் நிலங்களும் நீரில் மூழ்கியுள்ளன.

### வவுனியா

வவுனியா மாவட்டத்தில் 283 குடும்பங்களைச் சேர்ந்த 887 பேர் இடம் பெயர்ந்துள்ளனர். அவர்கள் 5 மேலதிக நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டு சமைத்த உணவுகள் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது 95 குளங்கள் வான் பாய்ந்து கொண்டுள்ளது. கடும் மழையின் காரணமாக செட்டிக்குளம் உடையார் குளம் மாத்திரம் உடைக்கப்பட்டுள்ளது. அக்குளம் கமநல சேவை திணைக்களத்தின் ஏற்பாட்டில் கமநல அமைப்பு ஊடாக புனரமைக்கப்பட்டுள்ளது. மேலும் குளங்களில் தேங்கும் மேலதிக நீரை வெளியேற்றுவதற்காக கமநல திணைக்களமும் கமநல அமைப்புக்களும் இணைந்து இதற்கான முன்னேற்பாடுகளை செய்து வருகின்றனர். வவுனியா புதியவேலர் சின்னக்குளம் பகுதியில் வீடுகளுக்கு நீர் புகுந்தும் நிலம் ஊறியும் கைக் குழந்தைகள் மற்றும் வயதானவர்களென பலர் சிரமப்படுகின்றனர்.

### மன்னார்

மன்னார் மாவட்டத்தில் உள்ள 5 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் 470 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 743 பேருக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. 4 நலன்புரி நிலையங்களில் 39 குடும்பங்களைச் சேர்ந்த 168 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளின் தங்கியுள்ளனர். மன்னார் மாவட்டத்தில் உள்ள 12 கமநல சேவைகள் நிலையங்களில் உள்ள சகல குளங்களும் வான் பாய்ந்து கொண்டிருக்கின்றன. இதனால் வெள்ளப் பாதிப்புக்களும் ஏற்பட்டுள்ளன. இதுவரை 5653 ஏக்கர் நெற்செய்கை பாதிப்படைந்துள்ளது.

கட்டுக்கரை குளம் 6 இஞ்சி வான் பாய்கின்றது. ஏனைய குளங்கள் வான் பாயும் நிலையில் உள்ளது.


குளங்களின் வான் பாய்வதினால் மக்கள் கடினமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. வாய்க்கால்களை மக்கள் மூடுகின்றமையினால் வெள்ளம் தேங்குவதற்கு ஒரு காரணமாக அமைந்துள்ளதாக அரச அதிபர் தெரிவித்துள்ளார்

மேலும் குறித்த மாவட்டங்களில் தாழ்நிலப்பகுதிகளில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், முப்படையினர் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் இடைத் தங்கல் முகாங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். கூடுதலான இடங்கள் போக்குவரத்துக்கள் செய்ய முடியாத நிலையில் வீதிகளை மூடி வெள்ளம் பாய்வதனால் படகுகள் மூலமும் உழவு இயந்திரங்கள் மூலமும் மக்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

(9-15-84-100-281-250-299-285-286-312-315-318-350)

# பாடசாலைக்குள் படகில் சென்ற மாணவர்கள்





(அக்கராயன்)

தொடர்ச்சியாக பெய்துவரும் கனமழை காரணமாக கிளிநொச்சியின் பல பகுதிகள் வெள்ளத்தினால் மூழ்கியுள்ளது. இதனால் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போது க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை தோற்றிவரும் மாணவர்கள் சில பகுதிகளில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி இந்துக்கல்லூரிக்கு பரீட்சைக்கு செல்லும் மாணவர்கள் வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்டிருந்த நிலையிலும் பாடசாலையினை சுற்றி வெள்ளம் காணப்படுவதனால் இராணுவத்தினரின் உதவியுடன் படகு மூலம் பரீட்சை மண்டபத்திற்குள் கொண்டு சென்று இறக்கி விடப்பட்டனர். (9-350)

# வெள்ளத்தில் சிக்கிய கார்



(முறிகண்டி)

தொடர்மழை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளம் அதிகரித்துள்ள நிலையில் நேற்று வட்டக்கச்சி நாவலடிப் பாலத்தில் பயணம் செய்தகார் ஒன்று தடம் புரண்டு நீர் ஓடையில் வீழ்ந்து இழுத்துச் செல்லப்பட்டது. குறித்த விபத்தில் சிக்கிய சாரதி பெரும் சிரமத்தின் மத்தியில் வெளியே வந்து மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

விபத்தில் கிக்குண்ட கார் இளை ஞர்களின் தீவிர முயற்சியின் பின்னர் மீட்கப்பட்டது. வட்டக்கச்சி சந்தைப் பகுதிக்கு அருகாமையில் உள்ள நாவலடிப்பாலம் திருத்த வேலைகளின் போது உரிய முறையில் வாகனங்கள் செல்ல வழி அமைக்காமையே குறித்த அனர்த்தம் இடம்பெறக் காரணம் என சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.(9-10-100)

# வவுனியா மாவட்ட பண்பாட்டு பெருவிழா







(நெளுக்குளம்)

வவுனியா மாவட்ட பண்பாட்டு பெருவிழா குடியிருப்பு கலாசார மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன், வவுனியா ம்ாவட்ட கலாசார பேரவையும் கலாசார அதிகார சபையும் மாவட்டச்செயலகத்துடன் இணைந்து நடத்தும் வவுனியா மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா மேலதிக அரசாங்க அதிபர் திரேஸ்குமார் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது நடனம், கிராமிய கலையளிக்கை, சிங்கள கிராமிய நடனம், மிருதங்க இசை என பல்வேறு கலை நிகழ்வுகள் இடம் பெற்றிருந்ததுடன் கலைஞர்களிற்கான கௌர விப்புக்களும் இடம் பெற்றிருந்தன.

இந்தநிகழ்வில் வவுனியா மாவட்ட அரச அதிபர் ஐ.எம்.கனீபா, யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் கலாநிதி மங்க ளேஸ்வரன், தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி க.சுவர்ணராஜா, வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி சுஜீவா சிவதாஸ், சுத்தானந்த இந்து இளைஞர் சங்க தலைவர் தமிழ்மணி அகளங்கன், தமிழ்ச்சங்க அமைப்பாளர் தமிழருவி சிவகுமார் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், கலைஞர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (9-299)

# டெங்கு ஒழிப்பில் கிராம உத்தியோகத்தர்கள்






(குருமன்காடு)

வவுனியாவில் டெங்கின் தாக்கம் தீவிரமடைந்துள்ள நிலையில் அதனை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் கிராம உத்தியோகத்தர்கள் ஈடுபட்டனர்.

வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்துடன் இணைந்து வவுனியா பிரதேச செயலகம் டெங்கு ஒழிப்பு செயற்றிடத்தினை நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை முன்னெடுத்திருந்தனர்.

வவுனியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராம உத்தியோகத்தர் அனைவரும் ஒன்றிணைந்து வவுனியா நொச்சிமோட்டை பகுதியிலிருந்து வவுனியா நகர் வரையிலான வீதியின் (A-9) இரு கரையிலும் சிரமதானப் பணியில் ஈடுபட்டிருந்தனர். (9-250)

## வீதியில் மரம் வீழ்ந்ததால் போக்குவரத்து பாதிப்பு



(நெளுக்குளம்)

வவுனியா - மன்னார் பிரதான வீதியில் வேப்பங்குளம் பகுதியில் வீதியோரத்தில் இருந்த பெரும் மரமொன்று நேற்று அதி காலை 4 மணியளவில் முறிந்து வீழ்ந்தமையினால் வீதியின் போக்குவரத்து பல மணி நேரமாக பாதிப்படைந்திருந்தது.

போக்குவரத்து 3 மணித்தியாலயமாக பாதிப்படைந்திருந்த வீதியை பொலிஸார் மற்றும் பொதுமக்கள், பயணிகளின் ஒத்துழைப்புடன் வீதியின் போக்குவரத்துக்கு இடையூறாகவிருந்த மரத்தினை வெட்டி அகற்றி வீதியின் அருகே போடப்பட்டுள்ளதுடன் போக்குவரத்து சீர்செய்யப்பட்டுள்ளது. (9-299)

# மன்னாரில் டெங்கு நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் அதிகரித்த நிலையில் காணப்படுவதாக மன்னார் பொது வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் க.செந்தூர்பதிராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த இரு மாதங்களில் மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஏனைய மாதங்களில் குறைந்த அளவில் காணப்படுகின்றது.

இவ் ஆண்டில் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 141 ஆக காணப்படுகின்றது.

டெங்கு நோயாளர்களுக்கான சிகிச்சைகள் ஒழுங்காக வழங்கப்பட்டாலும் டெங்கு நோயில் இருந்து பாதுகாப்பதே மிகவும் பிரதானமான நோக்கமாக உள்ளது.

மக்கள் தமது பொறுப்பை உணர்ந்து டெங்கு நுளம்பின் தாக்கத்தில் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

டெங்கு நுளம்பு பெருகும் இடங்களை தங்கள் வீடுகளில் இருந்தும், நடமாடும் பகுதிகள், பொது இடங்கள், கூடிய நேரத்தை செலவிடும் பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள் போன்ற இடங்களில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் இடங்களை கண்டு அழிப்பதன் மூலம் டெங்கு நுளம்பின் தாக்கத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும்.

மக்கள் பொறுப்புடன் செயற்படுவதன் மூலமே டெங்கு நுளம்பை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியும்.

மன்னார் மாவட்டத்தில் 5 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவு காணப்படுகின்றது.

இதில் மன்னார், நானாட்டான் ஆகிய இரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் ஒப்பீட்டளவில் கணிசமான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதில் மன்னார் பகுதியில் அதிக அளவு டெங்கு நோயாளர்கள் காணப்படுகின்றார்கள்.

இதற்கான கட்டுப்பாட்டு முறைகள் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் வழிகாட்டலில் குறித்த சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரிகள், சுகாதார ஊழியர்கள், டெங்கு கட்டுப்பாட்டு வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட அரச அதிபருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் அதிபரின் ஒத்துழைப்புடன் அந்தந்தப் பிரதேச செயலாளர்களின் உதவியுடன் அவற்றின் கீழ் இயங்குகின்ற கிராம உத்தியோகத்தர்கள் ஆகியோரின் உதவியுடன் அந்தந்தப் பிரதேசங்களில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



பொதுமக்கள் தமது பொறுப்பை உணர்ந்து உங்கள் பிரதேசங்களில் டெங்கு நுளம்புகள் அற்ற தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (9-285)

# பாரதம்

# பெண் வைத்தியர் வன்புணர்வின் பின் கெ

# குற்றவாளிகள் அதே இடத்தில் சுட்டுக்கெ



(ஐதராபாத்)

தெலுங்கானாவில் பெண் கால்நடை வைத்தியுரை எரித்துக்கொன்ற 4 பேரும் என்கவுண்டரில் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

தெலுங்கர்னாவில் பெண் வைத்தியர் பாலியல் வன்புணர்வு செய்து எரித்துக் கொல்லப்பட்ட சம்பவம் நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது.

ஐதராபாத்தின் புறநகரான சாம்ஷாபாத் பகுதியைச் சேர்ந்தவர் பிரியங்கா (வயது 27). கால்நடை வைத்தியராக பணியாற்றி வந்தார்.

கடந்த மாதம் 27 ஆம் திகதி வைத்தியசாலையில் பணியை முடித்து விட்டு இரவில் வீடு திரும்பிக் கொண்டிருந்தார். சுங்கச் சாவடியில் அவரது மோட்டார் சைக்கிள் டயர் பஞ்சர் ஆனது. அப்போது லொறி தொழிலாளர்கள் 4 பேர் அவருக்கு உதவி செய்வதாகக் கூறினர்.

4 பேரும் திட்டமிட்டு மோட்டார் சைக்கிளின் டயரை பஞ்சராக்கி பெண் வைத்தியரை அங்கிருந்து கடத்திச் சென்றனர். பின்னர் வாயில் மதுவை ஊற்றி மயக்கம் அடைய செய்து வன்புணர்வு செய்து கழுத்தை நெரித்து கொன்றனர்.

அவரது உடலை அருகேயுள்ள பாலத்துக்கு கீழே கொண்டு சென்று பெற்றோல் ஊற்றி எரித்தனர்.

இக் கொடூரச் சம்பவம் தொடர்பில் அவரது பெற்றோர் அளித்த புகாரின் பேரில் லொறி தொழிலாளர்கள் சென்ன கேசலு, முகமது பாஷா, நவீன், சிவா ஆகிய 4 பேரையும் பொலிஸார் கடந்த மாதம் 2ஆம் திகதி கைது செய்தனர்.

சீ.சீ.ரி.வி. கமராவில் குற்றவாளிகள் 4 பேரும் பெண் வைத்தியரை கடத்தி சென்றது பதிவாகி இருந்தது. இதன் மூலம் பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்திய இந்த பாலியல் வன்கொடுமை வழக்கில் அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கூறி அந்தப் பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதைத் தொடர்ந்து அரசு கடும் நடவடிக்கையில் இறங்கியது. முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்வதில் தாமதம் செய்ததாக 3 பொலிஸார் பணி இடை நீக்கம் செய்யப்பட்டனர். இந்த வழக்கை விசாரிக்க சிறப்பு விரைவு நீதிமன்றம் அமைக்க தெலுங்கானா முதல்வர் சந்திரசேகரராவ் உத்தரவிட்டார். இந்த நிலையில் குற்றவாளிகள் 4 பேரையும் 15 நாள் காவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டதால் அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர்.

அவர்களை 7 நாள் பொலிஸ் காவலில் விசாரிக்க அனுமதி வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அவர்களிடம் பொலிஸார் விசாரணை நடத்தி வந்தனர். நேற்று அதிகாலை 4 பேரையும் ஐதராபாத் பொலிஸார் பெண் வைத்தியரை எரித்துக் கொன்ற ஐதராபாத்-பெங்களூர் தேசிய நெடுஞ்சாலைக்கு அழைத்துச் சென்றனர்.

கொலை நடந்த பாலத்தின் அருகே சென்றபோது அவர்கள் எப்படி கொலை செய்தார்கள் என்பதை நடித்து காட்டினார்கள். அப்போது 4 பேரும் திடீரென பொலிஸாரின் ஆயுதங்களை பறித்தும், கற்களால் தாக்கியும் தப்பி ஓட முயன்றனர். உடனே பொலிஸார் குற்றவாளிகள் 4 பேரையும் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர்.

# ட்ரம்ப் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம்

## சபாநாயகர் அனுமதி



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் நான்சி பெலோசி அனுமதி வழங்கியுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் தற்போதைய ஜனாதிபதி ட்ரம்ப் மீண்டும் போட்டியிடுகிறார்.

அவரை எதிர்த்து, ஜனநாயக கட்சியை சேர்ந்த முன்னாள் துணை ஜனாதிபதி ஜோ பிடென் போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் ஜோ பிடெனின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் உக்ரைன் நாட்டில் அவரும், அவரது மகன் ஹன்டாரும் நடத்தி வரும் தொழில் தொடர்பாக அவர்கள் மீது விசாரணை நடத்த வேண்டும். இதைச் செய்யாவிட்டால் உக்ரைனுக்கு தருகிற பயங்கரவாத ஒழிப்பு நிதியை நிறுத்திவிடுவோம் என ட்ரம்ப் நெருக்கடி கொடுத்ததாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து, ட்ரம்ப் தனது பதவியை தவறாக பயன்படுத்தியதாகவும், இன்னொரு நாட்டுடன் இரகசிய பேரத்தில் ஈடுபட்டு தேச பாதுகாப்புக்கு ஆபத்தை ஏற்படுத்தியதாகவும் கூறி அவரை பதவி நீக்கம் செய்வதற்கான விசாரணையை ஜனநாயக கட்சி உறுப்பினர்கள் ஆரம்பித்தனர்.

ஒரு மாதத்துக்கும் மேலாக நாடாளுமன்ற புலனாய்வு குழு இதுகுறித்த விசாரணையை முன்னெடுத்து வருகின்றது.

இதற்கிடையே, விசாரணை தொடர்பான அறிக்கை நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

'தனது அரசியல் எதிரியான முன்னாள் துணை ஜனாதிபதி ஜோ பிடென் மீது விசாரணையை அறிவிக்க உக்ரைனுக்கு அழுத்தம் கொடுக்க ட்ரம்ப் தனது அதிகாரத்தை தவறாக பயன்படுத்தினார் என்பதற்கான ஆதாரங்கள் தெளிவாக உள்ளன' என தெரிவிக்கப்பட்டிருந்தது.




இந்நிலையில், ட்ரம்ப் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவர அந்நாட்டு நாடாளுமன்ற பிரதிநிதிகள் சபையின் சபாநாயகர் நான்சி பெலோசி அனுமதி வழங்கியுள்ளார்.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதி பதவியில் இருந்து நீக்கப்படுவார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# எரிவாயு க

# 11பேர் பலி;

## திருமண நிகழ்



(பக்தாத்)

ஈரானில் திருமண நிகழ்வு ஒன்றில் எரிவாயு கசிந்து தீ விபத்து ஏற்பட்டதில் 11 பேர் உயிரிழந்தனர்.

30இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

# ஆஸியில் வேகமாகப் பரவும் காட்டுத்தீ!

(சிட்னி)

அவுஸ்திரேலியாவின் நியூசௌவுத் வேல்ஸில் சுமார் 100 இடங்களில் காட்டுத்தீ ஏற்பட்டுள்ளது. இந்த தீ சிட்னியின் வடக்கே வேகமாக பரவி வருகிறது. 2 ஆயிரத்துக்கும் அதிகமான தீயணைப்பு வீரர்கள் தீயைக் கட்டுப்படுத்த போராடி வருகின்றனர்.

இந்நிலையில் அவுஸ்திரேலியாவின் நகரங்களில் இந்த வாரம் முழுவதும் அடர்த்தியான புகைமூட்டம் காணப்பட்டதுடன் சுவாசப் பிரச்சினைக்கான அச்சுறுத்தலும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த ஒக்டோபர் முதல் காட்டுத்தீயினால் ஆறு பேர் உயிரிழந்துள்ளதுடன் 700 இற்கும் மேற்பட்ட வீடுகளும் அழிந்தன.

அத்துடன் 1.6 மில்லியன் ஹெக்ரயருக்கும் அதிகமான நிலங்கள் ஏற்கனவே எரிந்துள்ள நிலையில் குயின்ஸ்லாந்து, விக்டோரியா, தெற்கு அவுஸ்திரேலியா, மேற்கு அவுஸ்திரேலியா மற்றும் டாஸ்மேனியா ஆகிய நாடுகளிலும் தீபரவியுள்ளது. இந்நிலையில் அவுஸ்திரேலியாவில் காலநிலை மாற்றத்தை சமாளிக்க அதிக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)



# வெளிநாடு

# கொலை கொலை!

க்கம்
ரிக்க
மக்க
ராவ்
றவா
லில்
தால்
னர்.
காவ
டது.
பாலி
னர்.
பாத்
த்துக்
தசிய
னர்.
நகே
லை
னார்
பாலி
கற்க
னர்.
பரை
னர்.



இச்சம்பவத்தை அறிந்த கல்லூரி மாணவிகள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து பொலிஸாருக்கு தங்களது நன்றியை தெரிவித்தனர். பொலிஸாரின் இந்த நடவடிக்கைக்கு பொதுமக்கள் உட்பட பல்வேறு தரப்பினரும் பாராட்டு தெரிவித்துள்ளனர். (ஐ-2)

# போராட்டக்காரர்கள்-பொலிஸார் மோதல் 6000 பொலிஸார் பாதுகாப்பு கடமையில்



(பாரிஸ்)

பிரான்ஸில் இடம்பெற்ற அரசாங்கத்திற்கு எதிரான போராட்டத்தில் வன்முறைச் சம்பவங்கள் பதிவாகின.

நாட்டின் பைசன்ரைன் (Byzantine) ஓய்வூதிய முறையை மாற்றியமைக்கும் திட்டங்களை ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் கைவிட வேண்டுமென வலியுறுத்தி நாடுதழுவிய வேலை நிறுத்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாடு தழுவிய வேலை நிறுத்தத்திற்கு தொழிற்சங்கங்கள் அழைப்பு விடுத்த நிலையில் பிரான்ஸின் பொதுப் போக்குவரத்துக்கள் நிறுத்தப்பட்டுள்ளன.



பாரிஸில் உள்ள ரயில்வே மற்றும் மெட்ரோ நிலையங்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிகாலை முதல் வெறிச்சோடிக் காணப்பட்டன.

இந்த வேலை நிறுத்தத்துடன் பாரிஸ் தலைநகர் வழியாக பாரிய ஆர்ப்பாட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில் 6 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இந்தநிலையில் போராட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது.

இதன்காரணமாக போராட்டக்காரர்களை கலைப்பதற்காக பொலிஸார் கண்ணீர் புகை, நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்டனர்.

இதன்போது சிலர் காயமடைந்துள்ளதாகவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ஐ-2)

# ...பு கசிந்து தீ விபத்து! ...லி; 30பேர் படுகாயம்

## ...கழ்வில் துயரம்



ஈரான் நாட்டின் மேற்கு பகுதி யின் குர்திஸ்தான் மாகாணத்தில் உள்ள சக்கெஸ் நகரில் நேற்று நடந்த திருமண விழாவில் திடீரென பயங்கர வெடிச்சத்தம் கேட்டது.

இதையடுத்து நிகழ்விடம் பற்றி எரிந்துள்ளது. அருகிலிருந்தவர்கள் உடனடியாக பொலிஸாருக்கு தகவல் அளித்தனர்.

நிகழ்விடத்திற்கு வந்த பொலிஸார் மற்றும் தீயணைப்பு படையினர் மீட்புப்பணிகளில் ஈடுபட்டனர்.

'இந்த தீ விபத்தில் 11 பேர் உடல் கருகி உயிரிழந்தனர். 34 நபர்கள் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

எரிவாயு கசிந்து பயங்கர சத்தத்துடன் தீப்பிடித்து விபத்து ஏற்பட்டுள்ளது.

இது குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது' என அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ-2)

ஒன்
ந்து
ந்த
படு

# ஐம்பதாயிரம் வர்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட கிறிஸ்மஸ் மரம்



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் 50 ஆயிரம் வர்ண விளக்குகள் கொண்டு கிறிஸ்மஸ் மரம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அமெரிக்க ஜனாதிபதி மாளிகைக்கு எதிரே இந்த மரம் அமைக்கப்பட்டுள்ளது.

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு, 1964ஆம் ஆண்டு முதல் இங்கு செயற்கையான மரம் வைக்கப்பட்டு ஒளியூட்டப்பட்டு வருகிறது.

இதற்கமைய இந்த ஆண்டும் அமெரிக்க நாடாளுமன்ற கீழவை சபாநாயகர் நான்சி பெலோசி தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மரத்துக்கு ஒளியூட்டப்பட்டது.

அத்துடன், நியூயோர்க் நகரில் புகழ்பெற்ற ரொக்கிபெல்லர் மையத்தில் உள்ள 77 அடி உயர கிறிஸ்மஸ் மரமும் ஒளியூட்டப்பட்டுள்ளது. (ஐ-2)

# ஈரானுக்கு எதிராக அமெரிக்கா படைகளை அனுப்புகிறதா?

## பென்டகன் தகவல்

(தெஹ்ரான்)

ஈரானால் ஏற்படும் அச்சுறுத்தலை எதிர்கொள்ள மத்திய கிழக்குப் பகுதிக்கு இராணுவத்தை அனுப்ப முடிவு எடுக்கப்பட்டதாக வெளியான செய்தியை அமெரிக்கா மறுத்துள்ளது.

ஈரானால் மத்திய கிழக்கு பகுதிகளில் ஏற்பட்டுள்ள பதற்றத்தை தணிப்பதற்காக சுமார் 14 ஆயிரத்துக்கும் அதிகமான படைவீரர்களை அங்கு அனுப்ப அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முடிவு எடுத்திருப்பதாக செய்திகள் வெளியாகின.

இந்நிலையில் இது முற்றிலும் தவறான செய்தி என அமெரிக்க பாதுகாப்புத்துறை செய்தித் தொடர்பாளர் அலிசா ஃபரா (Alyssa Farah) தெரிவித்தார்.

அமெரிக்கா உள்ளிட்ட 6 வளர்ந்த நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையே கடந்த 2015இல் அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதன்படி ஆக்கபூர்வ தேவைகளுக்கு யுரேனியம் செறிவூட்ட ஈரானுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

ஆனால், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற பின்னர் இந்த ஒப்பந்தத்தில் குறைபாடுகள் உள்ளதாகக் கூறி அதிலிருந்து விலகினார்.

மேலும் ஈரான் மீது மீண்டும் பொருளாதாரத் தடைகளை விதித்து வருகிறார். இதற்குப் பதிலடியாக ஈரான் அணுசக்தி ஒப்பந்த விதிகளை அடுத்தடுத்து மீறி வருகிறது. இதன் காரணமாக அமெரிக்கா-ஈரான் இடையே மோதல் நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# "சுவிஸ் தூதரகப் பணிப்பாளர் வாக்கு மூலம் வழங்கினால் பாதுகாப்பை உறுதி செய்வோம்"

## இலங்கை அரசு அறிவிப்பு



(கொழும்பு)

இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதரகத்தின் சர்ச்சைக்குரிய பெண் பணியாளர் கடத்தல் விவகாரம் தொடர்பில் வாக்கு மூலம் வழங்குவதற்கும் குற்றச்சாட்டுக்களுக்கான ஆதாரங்களை முன்வைக்கவும் முன்வர வேண்டுமென அரசாங்கம் வலியுறுத்தியது.

அவ்வாறு அவர் வந்து வாக்குமூலம் வழங்குவாராயின், அவரது பாதுகாப்பை அரசாங்கம் உறுதி செய்யுமென்றும் அமைச்சரவையின் இணைப் பேச்சாளரும் அமைச்சருமான ரமேஸ் பத்திரண தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


இதன்போது மேலும் தெரிவித்த அவர், சுவிட்சர்லாந்து தூதரகத்தின் பணியாளர் ஒருவர் கடத்தப்பட்டு விசாரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் குறித்த பணியாளர், வெளிநாட்டுக்குச் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், அவர் நாட்டை விட்டு வெளியேறிவிட்டாரா? என்பது தொடர்பில் தகவல் இல்லை என்றும் இந்த விடயத்தில், சுவிட்சர்லாந்து தூதரகத்தின் மீது தேவையற்ற அழுத்தங்களை அரசாங்கம் பிரயோகிக்காதெனவும் தெரிவித்தார்.

குறித்த பணியாளர், இதுவரையில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்யவில்லை என்றும் அவர் கடத்தப்பட்டு விசாரிக்கப்பட்டதற்கான ஆதாரங்களை முன்வைக்க வேண்டுமென்றும் பத்திரண கூறினார்.

"கடத்தப்பட்டு விசாரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் பெண் பணியாளரை, இதுவரையில் எவரும் பார்த்தில்லை. அவர் தொடர்பான எந்தவொரு தகவல்களும் இல்லை. ஆகவே, இச்சம்பவம் தொடர்பிலான முறைப்பாடொன்றையும் வாக்குமூலம் ஒன்றையும் அவர் வழங்க வேண்டுமென, அரசாங்கம் பல தடவைகள் சுவிட்சர்லாந்து தூதரகத்திடம் கோரிக்கை விடுத்ததாகவும் அமைச்சரவையின் பேச்சாளர் மேலும் கூறினார். (இ-7)

# ஷாபியின் சொத்து விபரத்தை நியாயப்படுத்திய அதிகாரிக்கு எதிராக விசாரணை வேண்டும்

## அத்துரலிய ரத்ன தேரர் வலியுறுத்து




(குருநாகல்)

குருநாகல் வைத்தியசாலை வைத்தியர் ஷாபி சாப்தீனின் சொத்து விபரத்தை நியாயப்படுத்திய அதிகாரிக்கு எதிராக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் வலியுறுத்தினார்.

வைத்தியருக்கு எதிராக விசாரணைகளை நடத்திய அதிகாரி குறித்த வைத்தியர் மீதான குற்றச்சாட்டுக்களைத் தவறவிட்டதாக ரத்ன தேரர் குற்றம் சாட்டினார்.

உர மானியத்திற்கு பதிலாக விவசாயிகளுக்கு உரத்தைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# வீட்டுக்குள் வெள்ளம் புகுந்தது

## சிறுவன் வைத்தியசாலையில்

(திருமலை)

வீட்டுக்குள் வெள்ளம் புகுந்த நிலையில் சிறுவன் விளையாடிக்கொண்டிருந்த போது சறுக்கி விழுந்ததில் மயக்கமுற்ற நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றது.

இவ்வாறு மயக்கமுற்ற சிறுவன் திருகோணமலை - ரொட்டவெவ பகுதியைச் சேர்ந்த ஆர். முக்ம்மட் றுஸ்தி (வயது-9) எனவும் தெரிய வருகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் தற்போது பெய்து வரும் அடை மழை காரணமாக வீடுகளுக்குள் வெள்ள நீர் புகுந்த நிலையில் மக்கள் அவதிப்பட்டு வருகின்றனர்.

சிறுவனின் தலையின் பின்புறம் அடிபட்டதாகவும் தொடர்ச்சியாக வாந்திபேதி ஏற்பட்டதால் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் வைத்தியசாலை பேச்சாளரொருவர் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மனித நம்பிக்கை

நம்பிக்கை இல்லை என்றால் இந்த உலகத்திலே நாம் நடமாடவே முடியாது சேர். அவநம்பிக்கையோடு இருந்து கொண்டு இருந்தால் என்றைக்கும் அவஸ்தைதான். நாம் நம்புவது நடக்குதோ இல்லையோ அது வேறு விடயம். ஆனால் அதை நம்பித்தான் நாம் அடி வைக்க வேண்டியிருக்கிறது. வேறு ஒன்றும் வேண்டாம் சேர் ஒரு லொட்டரி சீட்டு வாங்குகிறோம். அது எங்கே நமக்கு விழப்போகிறது என்ற அவநம்பிக்கையோடா வாங்குகிறோம். முதல் பரிசு நமக்குத் தான் என்கிற நம்பிக்கை உள்ளுக்குள் இருக்கத்தான் செய்கிறது. இருந்தாலும் முடிவு வேறு மாதிரி ஆகிவிடும். அதுக்காக மனம் தளர்ந்து போறதில்லை. அடுத்த மாதமும் சீட்டு வாங்குகிறோம். இந்த நம்பிக்கைதான் மனித வாழ்க்கைக்கு ஆதாரம்! ஒரு கடையிலே போய் டீ சாப்பிடுகிறீர்கள். அந்த டீ நல்ல டீ தானா? அதிலே விஷம் கலந்திருக்கிறதா? என்ற சந்தேகம் வந்து விட்டது என்றால் வைத்திருங்கள். அதன் பின்பு அதை எப்படி நீங்கள் சாப்பிட முடியும். நம்பித்தான் சாப்பிட வேண்டும். ரயில் ஒழுங்காக போய்ச் சேரும் என்கிற நம்பிக்கை இருக்கிறதனாலே தான் அதிலே ஏறி உட்காருகிறோம். லெட்டர் ஒழுங்காக போய்ச் சேர வேண்டும் என்கிற நம்பிக்கை இருக்கிறதனாலே தான் பெட்டியிலே போடுகிறோம். சரி நம்ம கதையெல்லாம் நம்மளோட இருக்கட்டும்! மனித நம்பிக்கை எவ்வளவு உறுதியாகவும் அறிவு பூர்வமாகவும் இருக்க வேண்டும் என்பதற்கு அலெக்சாண்டர் வாழ்க்கையில் நடந்த சம்பவத்தை உதாரணமாகச் சொல்லலாம்.

இந்த உலகத்தையே ஜெயிக்க வேண்டும் என்று புறப்பட்டார் அலெக்சாண்டர். ஒரு கட்டத்திலே அவர் சிட்னஸ் நதிக்கரைக்கு வந்து சேர்ந்தார். அந்த சமயத்திலே அவருக்குக் கடுமையான நோய் வந்து விட்டது. அவர் கூடவே வந்திருந்த கிரேக்க வைத்தியர்கள் என்னென்னமோ முயற்சி எல்லாம் செய்து பார்த்தார்கள். இருந்தாலும் அலெக்சாண்டருக்கு வந்திருக்கிறது என்ன நோய் என்கிறதை அவர்களாலே கண்டு பிடிக்க முடியவில்லை. ஏன் என்றால் அந்தப் பகுதியிலே உள்ளவர்களுக்கு மட்டும் அதிகமாக வரக்கூடிய விநோதமான நோயாக இருந்தது அது. ஆனால் அவர் இருக்கிற இடம் எதிரியோட இடம். பாரசீக மன்னனுடைய ஆளுகைக்கு உட்பட்ட இடம். என்ன செய்வது என்று எல்லோரும் யோசித்தார்கள். பாரசீக மன்னனுடைய அரண்மனையில் இருக்கிற வைத்தியர் வந்தால் இந்த நோயைக் குணப்படுத்தி விடுவார் அப்படி என்று சொன்னார்கள். இருந்தாலும்...எதிரியினுடைய நாட்டில் இருக்கிற வைத்தியரைக் கூப்பிட்டு எப்படி நம்பி வைத்தியம் பார்க்கச்சொல்லுறது? எல்லோரும் தயங்கினார்கள். ஆனால் அலெக்சாண்டர் தயங்கவில்லை. பரவாயில்லை அழைத்துக் கொண்டு வாங்க என்றார். உடனே அவரை போய் அழைத்துக் கொண்டு வந்தார்கள். அலெக்சாண்டர் உடம்பைப் பரிசோதனை செய்து பார்த்தார். சரி.... இதைக் குணப்படுத்திவிடலாம் பயப்பட வேண்டியதில்லை. ஆனால் இதுக்கு ஒரு மூலிகை ரசம் தயார் செய்து கொடுக்க வேண்டும். நான் சென்று அதைத் தயார் செய்து கொண்டு இரண்டு நாட்களிலே திரும்பி வருகிறேன் என்று சொல்லி விட்டுப் போனார் அந்த வைத்தியர். அதே மாதிரி இரண்டு நாட்களிலே திரும்பி வந்தார் மூலிகை இரசத்தோடு! இதற்கிடையில் அலெக்சாண்டரோட தளபதிகளிலே ஒருவன் இரகசியமாக ஒரு எச்சரிக்கை கடிதம் கொடுத்து அனுப்பியிருக்கிறான். அதை வாங்கி என்ன விடயம் என்று பார்த்தார். இப்பொழுது உங்களிடம் வந்திருக்கிற எதிரி நாட்டு வைத்தியரை நம்பாதீர்கள். அவன் கொண்டு வருகின்ற மூலிகை இரசத்திலே விஷம் கலந்திருக்கிறது என்று அதிலே எழுதியிருந்தது.

அதைப் பார்த்தார் அலெக்சாண்டர். இருந்தாலும் கொஞ்சம் கூட அலட்டிக்கவில்லை. வைத்தியர் கொடுத்த மருந்தை வாங்கி கடகட என்று குடித்தார். குடித்ததன் பின்பு கடிதத்திலே இருந்த விடயத்தை அந்த வைத்தியரிடம் சொன்னார். வைத்தியர் திகைத்துப் போய்விட்டர். அதன் மேலே அலெக்சாண்டர் வைத்திருக்கிற நம்பிக்கையைப் பார்த்து வைத்தியர்-உண்மையாகவே நல்ல மருந்தைத் தான் கொண்டு வந்திருக்கிறார். அதிலே விஷம் எதுவுமில்லை. அதன் பின்பு அலெக்சாண்டர் அந்த வைத்தியரைப் பார்த்துச் சொன்னாராம். நம்பிக்கை என்கிற அச்சாணியை ஆதாரமாக வைத்துக் கொண்டு தான் இந்த உலகம் சுத்திக் கொண்டிருக்கிறதுஎனக்கு எதிரியாக இருந்தாலும் பாரசீக மன்னர் ரொம்பப் பெரியவர். அப்படிப்பட்ட மன்னனுடைய அரண்மனை தொழில் நேர்மை இல்லாதவராக இருக்கமாட்டார். அப்படியிருந்தால் அவரை அரண்மனை வைத்தியராக வைத்திருக்கவே மாட்டார்கள் என்று நம்பினேன். என்னுடைய நம்பிக்கை வீண் போகவில்லை என்றார். இதுதான் மானிட நம்பிக்கை என்பது. இந்த காலத்திலேயும் இந்த மானிட நம்பிக்கையை ரொம்பவும் சாமர்த்தியமாகக் கையாளுகிற கெட்டிக்காரர்கள் சில பேர் இருக்கிறார்கள்.

இந்தக் காலத்துக் குரு. அவருக்கு ஒரு சிஷ்யன். குரு முன்னால் அந்த சிஷ்யன் ரொம்ப பணிவாக நின்று குருவே உங்க கையாலே விஷத்தைக் கொடுத்தாலும் அதை வாங்கி மடமட என்று குடித்து விடுவேன் என்றான். உன்னுடைய குரு பக்தியை மெய்ச்சினேன் என்றார் குரு. அதுக்கு அந்த சிஷ்யன் அப்படி இல்லை குருவே உங்களிடம் சிஷ்யனாக இருக்கிறதை விட உங்கள் கையாலே விஷத்தை வாங்கிக் குடிப்பது ரொம்ப நல்லது. அதனாலே தான் அப்படிச் சொன்னேன் என்றான்.

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–193

# உலக மண் தினம்-டிசெம்பர்-05



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

இரு தினங்களுக்கு முன்னர் உலக மண் தினம் டிசெம்பர் 5 இல் உலகெங்கும் கொண்டாடப்பட்டிருக்கின்றது. இது ஒரு நாள் கொண்டாட்டமல்ல. வருடம் முழுவதுமாக கொண்டாட வேண்டிய கருவாகும். நாம் ஆர்ப்பரித்து அவதரித்த இப்பூமியில் ஆடியோடி அடங்கிவிடுவதும் ஆறடி மண்ணிலேதான். மண்ணிற்கான முக்கியத்துவத்தை அவதானித்து அளந்து அடையாளப்படுத்தியிருக்கின்றார்கள் உலக உணவு தாபனத்தினர். உலக மண் தினத்தை டிசெம்பர் 5 இல் கொண்டாடுவது கனதியாகின்றது.

உலகளாவிய ரீதியில் உணவு மற்றும் விவசாய நிறுவனம் (Food and Agriculture Organization) இதற்காக பல வழிகளைக் கையாண்டு இந்த தினத்தை உலக மக்கள் அனைவரும் அறிந்துணரச் செய்திருக்கின்றது.

உலக மண் தினத்தின் முக்கியத்துவம் பற்றி உலகமே கொண்டாட வேண்டிய தேவை எழுந்துள்ளதற்கு பல காரணங்களை இனங்கண்டாலும் அவற்றுள் உள்ளார்ந்து எழுந்திருக்கும் முக்கிய காரணமாக மண் வளத்தையும் அதனது பங்களிப்பினையும் குறிப்பிடலாம்.


மண்ணின் வளம் என்பது மண்சார்ந்திருக்கின்ற அனைத்து உயிரினங்களின் வாழ்க்கையையும் அவற்றின் வாழிடத்தையும் இவ்வாறான உயிரினங்களினால் மண்ணின் தன்மையில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களையும் சுட்டி நிற்பதாக பொருள் கொள்ளலாம்.

மண் அல்லது நிலம் என்பதனூடாக உயிர்ப்பின் தன்மையை வெளிக்காட்டுகின்றதனை காணலாம். அதாவது மண்ணிற்கு உயிருண்டு என கூறுவதில் தப்பேதுமில்லை. மண்ணிலுள்ள உயிர்ப்பின் தன்மையை அதில் பயிரிடும் எந்த வகையான பயிராக இருந்தாலும் அதன் வளர்ச்சியில், உற்பத்தியில் மண்ணின் பங்களிப்பு மிக மிக அதிகம். சிறந்த ஒரு ஊடகமாக மண் இருக்கின்றது என்னும் உண்மையை நாம் அநேகமான இடங்களில் மறந்தே போய்விடுகின்றோம்.

மண் என்பது ஒரு கலவை எனவும் வெறுமனே மண் துணிக்கைகளால் ஆனது என்று நாம் கணித்துவிடக்கூடாது. கலவையானாலும் இந்தக் கலவை பல்வேறுபட்ட உயிரினங்களின் வாழிடமாக இருக்கின்றதென்றால் நம்பமுடிகின்றதா? மண்ணினுள் பல்வேறு வகையான அங்கிகள் வாழ்கின்றன.

பொதுவாக இந்த அங்கிகள் இன்னும் நுண்ணங்கிகள் மண்ணை வளப்படுத்தும் செயற்பாட்டுக்காகவே மண்ணில் பொதிந்திருக்கின்றன. மாறாக தீமை தரும் நுண்ணங்கிகள் மற்றும் உயிரினங்களும் இதனுள் உள்ளடக்கம். மண்ணில் அதிகளவில் நன்மைதரும் நுண்ணங்கிகள் காணப்படும் போது அதனை நாம் வளமுள்ள மண்ணாக எண்ணுகின்றோம். நுண்ணங்கிகள் மற்றும் அங்கிகளற்ற மண்ணில் எதுவுமிருக்காது. அதாவது அந்த மண்ணுக்கு உயிர்ப்பிருக்காது. மண்ணில் காணப்படும் அங்கிகள் மற்றும் நுண்ணங்கிகளின் இயக்கத்தினால் காபன் வட்டம், நைதரசன் வட்டம் என பலவகையான ஊட்டச்சத்து மாற்றங்கள் நடைபெறுகின்றன. இத்தகைய மாற்றங்களுக்கு . மண்ணில் உள்ள நுண்ணங்கிகளினதும் அங்கிகளினதும் செயற்பாடு முக்கிய காரணங்களாக அமைகின்றன.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 206




இந்த பூகோளத்தில் மண்ணினை நாம் ஏன் பாதுகாக்க வேண்டும்? மண்ணினை சிறப்பானதாக நீண்டகாலத்திற்கு வாழதகைமையுள்ளதாக முகாமைத்துவப்படுத்தி பாதுகாப்பதனால் பலவிதமான நன்மைகள் நமக்குக் கிடைக்கின்றன.

குறிப்பாக கால நிலை மாற்றத்தினாலேற்படும் பிரச்சினைகளை வெற்றி கொள்வதற்கு, பஞ்சத்தை இல்லாதொழிக்க, குடிப்பதற்கு நல்ல நீரைப் பெற்றுக் கொள்வதற்கு, உயிர்ப்பல்வகைத் தன்மையை பாதுகாத்துக் கொள்ள, இன்னும் மாறிவரும் சூழல்நிலைமைகளுக்குள் எம்மை பழக்கிக்கொள்ள, வரட்சியை தாக்குப்பிடிக்க, வாழ்வாதாரத்தை முன்னேற்ற, சூழல் மாசாக்கிகளின் அளவினை குறைக்க, சூழலில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள ஆகும்.

மண்ணில் சேதன காபனின் அளவினை அதிகரிக்க தற்போது எங்களிடமுள்ள மண்ணினை அவசியம் நாம் பாதுகாக்க வேண்டும்.

உலகத்திலுள்ள மண்ணானது காபனினை அதிகளவில் கொண்டிருப்பதனால் அது வளியில் பச்சைவீட்டு வாயுக்களின் அளவை குறைப்பதற்கு உதவுகின்றது.

மூன்றில் ஒரு பகுதி மண் விரயமாக்கப்பட்டிருக்கின்றது. பூமியிலுள்ள மீண்ணினை பாதுகாப்பதனால் 51 ஜிகா தொன்கள் காபனை வளிமண்டலத்திலிருந்து மண்ணினுள் பதிக்க முடியும். இதனால் காலநிலை மாற்றத்தினை நாம் இலகுவாக எதிர்கொள்ள முடியும். 2015 இலிருந்து 2050 வரையான காலப்பகுதியில் உணவுக்கான தேவை 49 சதவீதத்தினால் அதிகரிக்கவிருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. இதன்மூலம் விவசாய உற்பத்திகள் அதிகரிக்க வேண்டிய தேவையும் அதிகரிக்கும் மக்கள் தொகைக்கு உணவூட்டவேண்டிய பொறுப்பும் முன்னெழுந்துள்ளது. இதன்மூலமே நாம் இனங்கண்ட பேண்தகு அபிவிருத்திக்கான நோக்கங்களை அடைய முடியும். இவையெல்லாவற்றிற்கும் எமக்கு வளமுள்ள மண் (Fertile soils) அவசியமாகின்றது.

வளமான மண்ணில் தேவையானளவு மண் காபன் நிறைந்திருக்கும் போது அது பயிர்களை சிறந்த முறையில் உற்பத்தி செய்வதற்கும் பயிர்கள் சிறப்பாக வளர்வதற்கும் வழிசெய்கின்றது. குறிப்பாக ஊட்டச்சத்துக்களின் மீள் சுழற்சியும் நீர் வடிந்து செல்லும் தன்மையும் மண்ணில் நீர் சேமிப்பதற்கான வழிவகைகளும் மேன்மையுறுவதற்கு இது வழிவகுக்கும். மண்ணில் சிறப்பான முகாமைத்துவத்தின் மூலம் மண் காபனின் அளவை அதிகரிப்பதால் உணவுற்பத்தியை வருடமொன்றுக்கு 17.6 மெகா தொன்களால் அதிகரிக்க முடியும் என அறிய முடிகின்றது.

இதன்மூலம் மொத்த உணவுற்பத்தியை வரட்சியான காலப் பகுதியிலும் அதிகரிப்பதற்கு வழி கிடைக்கும்.

அவ்வாறாயின் மண்ணிலுள்ள காபனின் அளவை அளந்தறிய முடிந்தால் பல பிரச்சினைகளுக்கு விடை கண்டிடலாம். ஆனால் இவ்வாறு அளவிடுவது இலகுவான காரியமன்று. அதற்காக அதிகரித்த செலவும் அதிகமான வேலைப் பளுவும் இன்னும் சிறந்த ஆய்வு கூடமும் அவசியமாகும்.

அநேகமான நாடுகளில் மண்ணிலுள்ள காபனை மதிப்பிடுவதற்கு தேசிய மண் பற்றிய தகவல்கள் முழுமையாக இல்லை. ஆனாலும் வேறுபட்ட முறையியலினூடாக மண்ணிலுள்ள காபனை மதிப்பிடுவதும் சரியான தகவல்களை முழுமையாகத் தராது. இந்நிலையில் தான் உலக மண் தகவல் தொகுதி (Global Soil Information System - GLOSIS) உருவாக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் முதலாவது உற்பத்தியாக உலக மண் காபன் வரைபடம் (Global Soil Organic Carbon Map – GSOC Map) உருவாக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அந்தந்த நாடுகள் தங்களது மண் வரைபடத்தினதும் மண்ணின் காபன் வரைபடத்தின் மூலமும் மண்ணில் காபனை வினைத்திறனாக சேமிப்பதற்கான தீர்மானங்களை எடுக்க முடியும்.

இதன்மூலம் ஒரு நாட்டின் மண்ணின் தகவல்கள் பெறப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டு அவை முக்கியமான சான்றாதாரங்களுடனான தீர்மானங்களை எடுப்பதற்கு பயன்படுகின்றன.

மேலும் மண்ணரித்தலுக்குள்ளான பகுதிகள், வரட்சியான பகுதிகள் என்பன இல்குவில் இனங்காணப்பட்டு அவற்றினை மேலும் வினைத்திறனாக்குவதற்கான வழிகளைத் தேட வழி செய்திருக்கின்றது.

2030 ஆம் ஆண்டுக்கான தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில் இத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அவை அனைத்து இடங்களிலும் வினைத்திறனாகப் பயன்படுத்தப்படுகின்றன. இந்த GSOC Map டிசெம்பர் 5 ஆம் திகதி உலகத்திலுள்ள மக்கள் பயன்பெறுவதற்காக உருவாக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

மண்ணிலுள்ள சேதன காபனை பாதுகாப்பதற்காக இவ்வாறான வரைபடங்கள் உதவுவதோடு அவற்றை பாதுகாப்பாக பயன்படுத்தவும் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு உருவாக்கப்பட்ட வரைபடங்களிலிருந்து மக்கள் தற்போது இவற்றைப் பற்றியறிந்து அதன் மூலம் தங்களது விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்தவும் ஆவலாக உள்ளனர்.

மண்ணுக்கான முக்கியத்துவத்தை அறிவிக்கும் உலக மண் தினம் டிசெம்பர் 5 இல் மக்களால் எதிர்வரும் ஆண்டுகளில் இன்னும் சிறப்பாகக் கொண்டாடப்படல் வேண்டும்.

பூமித்தாயை நாம் பாதுகாத்தால் எம்மை பூமித்தாய் பாதுகாப்பார். அன்னை மண்ணைக் காப்பதில் நாம் என்றும் முன்னிற்க வேண்டும். அதன் வளத்தைப் பாதுகாப்பதில் எமது விவசாயச் செய்கைகள் திட்டமிடப்படல் வேண்டும்.

எமது எதிர்கால திட்டத்தில் மண்வளம் எள்ளளவேனும் குறையாமல் அதனை மேலும் அதிகரிக்க நாம் என்றும் முனைப்பு காட்டுதல் அவசியமாகும்.

# மிரிஹான தடுப்பு முகாமில் இருந்த 30 வெளிநாட்டவர்களைக் காணவில்லை

## அதிர்ச்சித் தகவல் வெளியீடு

(மிரிஹான)

**மிரிஹானவிலுள்ள வெளிநாட்டவர்களைத் தடுத்து வைக்கும் தடுப்பு முகாமில் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தினர் நேற்று முன்தினம் மேற்கொண்ட திடீர் தேடுதலில் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த 30 ஆபிரிக்கப் பிரஜைகள் காணாமல் போயுள்ளதாகத் தெரியவந்தது.**

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகள், மிரிஹான பொலிஸ் தலைமையக அதிகாரிகள், விசேட அதிரடிப்படையின் அதிகாரிகள் உட்பட 50 இற்கும் மேற்பட்ட அதிகாரிகள் இந்தத் தேடுதலை நடத்தியதுடன் நேற்று முன்தினம் காலை முதல் சில மணி நேரம் இந்தத் தேடுதல் நடத்தப்பட்டது.

முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் காணாமல் போன 30 ஆபிரிக்க பிரஜைகளில் அதிகமானோர் நைஜீரியப் பிரஜைகள் எனத் தெரியவந்தது.

காணாமல் போயுள்ள வெளிநாட்டவர்களைக் கைது செய்ய மிரிஹான பொலிஸாரின் உதவியுடன் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## வடமாகாண நிர்மாணத்துறை ஒப்பந்தகாரர்கள் இனி கொழும்பிற்கு அலையத் தேவையில்லை

(யாழ்ப்பாணம்)

நிர்மாண ஒப்பந்தகாரர்கள் இத்துறையில் ஏற்படும் பிணக்குகளை யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றத்தில் முறையீடு செய்து உரிய தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடுத்தீர்ப்பாளர் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் நீதியமைச்சரால் கடந்த 24.09.2019 ஆம் திகதியிடப்பட்ட 2142/12 ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

1995 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இலங்கை நடுத்தீர்ப்பாளர் சட்டத்தின் பிரகாரம் இதுவரை காலமும் கொழும்பு மேல்நீதிமன்றத்திற்கு மட்டும் வழங்கப்பட்டிருந்த இவ்வதிகாரம் தற்போது யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டிருப்பதானது வடமாகாண மற்றும் ஏனைய வடமாகாணத்திற்கு அண்மையிலுள்ள நிர்மாணத்துறை ஒப்பந்தகாரர்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ள மிகச்சிறந்த ஓர் வரப்பிரசாதமாகும்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தனிநபர் ஒருவரால் பொதுநல அடிப்படையில் முன்வைக்கப்பட்ட விண்ணப்பத்தினைக் கருத்திற் கொண்டு மிக நீண்ட நாட்களாக பரிசீலனை மற்றும் உரிய நியாயங்களைக் கருத்தில் கொண்டு நீதியமைச்சரால் ஒப்பமிடப்பட்டு கடந்த 24.09.2019 ஆம் திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் இவ்விடயம் சாத்தியமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்மூலம் பிணக்குகளை தீர்ப்பதற்காக இதுவரை காலமும் கொழும்பை நாடவேண்டியிருந்த தேவை மற்றும் தேவையற்ற அலைச்சல்கள், பண விரயம் என்பன தவிர்க்கப்பட்டுள்ளதுடன் காலம் தாழ்த்தாது உரிய காலப்பகுதியினுள் உரிய தீர்வுகளுடன் கூடிய நிவாரணம் கிடைப்பதற்கும் வழியேற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்விடயம் தொடர்பில் இலங்கைத் தேசிய நிர்மாண சங்க வடமாகாண கிளையினரால் வடமாகாணத்தினைச் சேர்ந்த நிர்மாண ஒப்பந்தகாரர்களுக்கு உரிய வகையில் இதன் பலாபலன்களை அனுபவிப்பதற்கேற்ற அனைத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும் கண்டி நீதி நிர்வாக மேல்நீதிமன்றத்திற்கும் இவ்விடயம் தொடர்பிலான சட்ட ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ

## விசித்திரமான முறையில் திருட்டு; குருவி எனப்படும் நபர் கைது



(அம்பாறை)

மிருகங்கள், பறவைகள் போன்று மிமிக்ரி சத்தமிட்டு சூட்சுமமான முறையில் திருடி வந்த குருவி என்று அழைக்கப்படும் பிரபல திருடன் கைது செய்யப்பட்டார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சாய்ந்தமருது பகுதியில் கடந்த நவம்பர் மாதம் 29 ஆம் திகதி நகை திருட்டு தொடர்பான முறைப்பாடு ஒன்று கிடைக்கப்பெற்றது.

இதனடிப்படையில் முறைப்பாடு தொடர்பாக கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சுஜித் பிரியந்த தலைமையில் உப பொலிஸ் பரிசோதகர் வை. அருணன் சார்ஜன்ட் ஏ.எல்.எம். றவூப் (63188), கான்ஸ்டபிள் கீர்த்தனன் (6873) ஆகியோர் விசாரணை மேற்கொண்டு வந்தனர்.

குறித்த முறைப்பாட்டிற்கமைய செயற்பட்ட பொலிஸார் திருட்டு சம்பவம் இடம்பெற்ற வீட்டிற்கு அருகில் உள்ள சீ.சீ.டி.வி. காணொலியைப் பெற்று குறித்த காணொலியை ஆதாரமாகக் கொண்டு சாய்ந்தமருது பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதுடைய சந்தேக நபர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். குருவி என்ற பிரபல திருடன் ஏற்கனவே 3 மோட்டார் சைக்கிள் திருட்டிற்காக 3 முறை தலா 6 மாத சிறைத் தண்டனை பெற்றிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ)

## சட்டவிரோதமாகக் குளம் அமைப்பு; பொது மக்கள் கண்டன ஆர்ப்பாட்டம்



(காத்தான்குடி)

இயற்கை வழியாக வெள்ள நீர் வடிந்தோடக் கூடிய தோணா வழியைத் தடைசெய்து சட்டவிரோதமாகக் குளம் அமைத்ததைக் கண்டித்து காத்தான்குடி நகரில் கண்டன ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டுள்ளது. காத்தான்குடி நகர சபைத்தலைவர் எஸ்.எச்.எம். அஸ்பர் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டப் பேரணியில், கன மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டோர் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த நகர சபைத் தலைவர், "ஆரையம்பதி பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் மக்களின் காணிகளை அபகரித்து, தேவையற்ற விதத்தில் எதற்கும் பிரயோசனமில்லாமல், ஊர் மத்தியில் அமைக்கப்பட்டுள்ள குளம் ஒன்றினால் இயற்கையாக நீரோடும் வழி தடைப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் காத்தான்குடிப் பிரதேசத்தைச் சேர்ந்து சுமார் 5000 முஸ்லிம் குடும்பங்களும் கிட்டத்தட்ட அதே எண்ணிக்கையுடைய ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவில் வசிக்கும் தமிழ் மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

எனவே, இந்நிலைமைக்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென கோரியே இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளோம்" என்றார். (ஜ)

## சிறுவர்தின விழாவும் கலைவிழாவும்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட வதிரி முன்பள்ளியின் சிறுவர்தின விழாவும் கலைவிழாவும் இன்று 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் வடமராட்சி பிரதேச சபைச் செயலாளர் அ.விநோராஜ் தலைமையில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி.சுலோச்சனா முருகநேசன், சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் த.ஐங்கரன், வடமராட்சி வலய முன்னாள் முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.தில்லைநாதன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-5-60)

## பிக்குகளை அவமதித்தோருக்கு வேட்புமனு வழங்க வேண்டாம்







(கொழும்பு)

பௌத்த பிக்குகளை அவமதித்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்பு மனுக்களை வழங்க வேண்டாம் என திரி நிக்காயக என்ற இளம் பௌத்த பிக்குகள் சங்கம் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் மனுவொன்றைக் கையளித்தது.

அதன்படி ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான மங்கள சமரவீர, ராஜித சேனாரட்ன மற்றும் ரஞ்சன் ராமநாயக்க ஆகியோருக்கே வேட்பு மனுக்களை வழங்க வேண்டாம் என அந்த மனுவில் வலியுறுத்தப்பட்டது. (இ-7)

# வெளுத்து வாங்கிய மழை வெள்ளக்காடானது யாழ்ப்பாணம்

## மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு



வேலணை






கொடிகாமம்




சாவகச்சேரி






கரவெட்டி



மருதங்கேணி



படங்கள்:- சுபேசன், மகாலிங்கம், பொற்பதி செய்தியாளர்.




ஆழியவளை





வெற்றிலைக்கேணி





உடுத்துறை



யாழ்ப்பாணம்

# மின்சார சட்டத்தில் திருத்தம் செய்ய சிறப்புக்குழு

## துறைசார் அமைச்சர் அமரவீர தெரிவிப்பு



(கொழும்பு)

புதிய மின் உற்பத்தி தொடர்பான முடிவுக்கு சட்டத்தின் சில விதிகள் தடையாக இருப்பதால் அதனை திருத்தியமைப்பது தொடர்பாக ஆராய்வதற்கு சிறப்பு குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

இலங்கையின் எதிர்கால மின் நெருக்கடி குறித்து இலங்கை மின்சார வாரியம், பொது பயன்பாட்டு ஆணையகம் மற்றும் மின் மற்றும் எரிசக்தி அமைச்சின் அதிகாரிகள் ஆகியோருடன் அமைச்சர் மகிந்த அமரவீர நேற்றுக் கொழும்பில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியிருந்தார்.

அதனைத் தொடர்ந்து கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். "2020 ஏப்ரல்- மே மாதத்திற்குள் பாரிய மின் நெருக்கடியை நாடு எதிர்கொள்ள நேரிடும். இது பாரிய மின்வெட்டுக்கு வழிவகுக்கும்.

மேலும் சூரியசக்தி மற்றும் காற்றாலை மின் திட்டத்தின் கூடுதல் திறனைச் செயற்படுத்த இலங்கை மின்சார வாரியமும் மின் அமைச்சகமும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது தெரியவந்தது.

மேலும் இப்பிரச்சினைக்கு புதிய முறைகளை பயன்படுத்துவதற்கு தேசிய மின்சார சட்டம் தடையாக இருப்பதாக மின் துறையின் சிரேஷ்ட அதிகாரிகள் கூறுகின்றனர்.

எனவே தற்போதுள்ள மின்சாரச் சட்டத்தை ஆராய்ந்து, அதிலுள்ள தடைகளை நீக்குவது குறித்து ஆராய்ந்துள்ளோம்.

இதற்காக சிறப்புக் குழுவொன்றை நியமித்துள்ளோம். மேலும் மக்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தாத வகையில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கை- ஐக்கிய அரபு இராச்சியம்;கைதிகள் பரிமாற்ற பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கிடையில் கைதிகளை பரிமாற்றிக்கொள்வதில் இருக்கும் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இலங்கைக்கான ஐக்கிய அரபு இராச்சியத்தின் தூதுவர் அஹ்மத் அல்முல்லாஹ் நீதி, மனித உரிமைகள், சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவை நேற்று நீதி அமைச்சில் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது இரண்டு நாடுகளுக்கிடையில் நீதிமன்ற துறையில் இருக்கும் தொடர்புகளை மேலும் விரிவுபடுத்துவது தொடர்பாக இருவரும் கலந்துரையாடியுள்ளனர். (இ-7)



## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1909

**விஜயந்தினி**




**அஜந்தா**




**சிவாஸ்கர்**




**தரசுதா**




**அபிசுயா**







நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## சுவிஸ் தூதரகப் பெண் கடத்தல் விவகாரம்

# ராஜிதவின் ஊடகச் சந்திப்பு குறித்த காணொலிகளை ஆராயவுள்ள சி.ஐ.டி



(கொழும்பு)

கொழும்பிலுள்ள சுவிட்சர்லாந்து தூதரகத்தில் கடமையாற்றும் உள்நாட்டுப் பெண் பணியாளர் கடத்தப்பட்டு, சில மணிநேரம் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டு, பாலியல் துன்புறுத்தல்களுக்குட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்ன வெளிப்படுத்திய விடயங்கள் குறித்து விசாரணையாளர்களின் அவதானம் திரும்பியுள்ளது.

அதன்படி இந்த கடத்தல் விவகாரம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் சி.ஐ.டி.யின் மனிதப் படுகொலை விசாரணைப் பிரிவினர், முன்னாள் அமைச்சரின் ஊடக சந்திப்பின் காணொலிகளை ஆராய தீர்மானித்துள்ளனர்.

அதன்படி விசாரணை அதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ரஞ்ஜித் முனசிங்க, நேற்று முன்தினம் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் இடையீட்டு மனுவொன்றூடாக, முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரட்னவின் ஊடகச் சந்திப்பு குறித்து செய்தி வெளியிட்ட 7 ஊடக நிறுவனங்களிடம் உள்ள அந்த ஊடக சந்திப்பின் செம்மைப்படுத்தப்படாத ஒளி, ஒலிப்பதிவுகளைப் பெற கோரிக்கை முன்வைத்தார்.

இந் நிலையில், சி.ஐ.டி.விசாரணைகளுக்காக கோரும் அந்த ஒளி, ஒலிப் பதிவுகளை வழங்க கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜெயரத்ன ஏழு ஊடக நிறுவனங்களுக்கு நேற்று முன்தினம் உத்தரவிட்டார். (இ-7)

# லேக் ஹவுஸ் நிறுவனத்துக்கு புதிய தலைவர்!



(கொழும்பு)

லேக் ஹவுஸ் நிறுவனத்தின் புதிய தலைவராக டாக்டர் சரித ஹேரத் நேற்று நியமிக்கப்பட்டார்.

தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பம், உயர்கல்வி, தொழில்நுட்ப புத்தாக்க அமைச்சர் பந்துல குணவர்த்தன இவருக்கான நியமனக் கடிதத்தை வழங்கினார்.

டாக்டர் சரித ஹேரத் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரும், பெரதெனியா பல்கலைக்கழகத்தின் பிரதித் தலைவரும், முன்னாள் சுற்றுச்சூழல் துறைத் தலைவரும், ஊடக அமைச்சின் முன்னாள் செயலாளரும் ஆவார். (இ-7)

# மட்டக்களப்பில் கடும் மழை; 6696 குடும்பங்கள் பாதிப்பு





(ஏறாவூர்)

மட்டக்களப்பில் தொடர்ச்சியாக பெய்து வரும் கன மழை காரணமாக 6696 குடும்பங்களைச் சேர்ந்த 22 ஆயிரத்து 614 பேர் பாதிக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில், நேற்றுக்காலை கால நிலை தொடர்பாக விசேட அவசர கூட்டமொன்று நடத்தப்பட்டது.

இதன்போதுபுனானை அணைக்கட்டில் நீர் அதிகரிக்குமானால் உடனடியாக 193 குடும்பங்கள், கிரான் பிரதேசத்தில் இருந்து பாதுகாப்பான இடங்களை நோக்கி செல்ல வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது

மாவட்டத்தில் தொடர்ச்சியாக ஏற்பட்டு வரும் அடைமழை காரணமாக அணைக்கட்டுகளில் நீர் அதிகரித்து வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

தற்போதுவரை மட்டக்களப்பு மாவட்டத்தில் 8 இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கப்பட்டு 301 குடும்பங்களைச் சேர்ந்த 799 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் 6696 குடும்பங்களைச் சேர்ந்த 22 ஆயிரத்து 614பேர் இடம்பெயர்ந்து உறவினர்களின் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கான நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் உலர் உணவுப் பொருட்களும் சமைத்த உணவுகளும் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வட முனை- ஊத்துச்சேனை ஆகிய பகுதிகளுக்கான போக்குவரத்துக்கள் முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதிக்கு செல்லும் பிரதான வீதியூடாக ஐந்து அடிக்கும் மேல் நீர் பாய்வதன் காரணமாக போக்குவரத்துகள் தடைப்பட்டுள்ளன. (இ-7)

# செய்தித்துளிகள்

## விடுமுறையில் சென்ற இராணுவச் சிப்பாய் நேற்றுச் சடலமாக மீட்பு

(திருகோணமலை)

திருகோணமலை தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இராணுவச் சிப்பாயின் சடலமொன்று நேற்றுக் காலை மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட இராணுவச் சிப்பாய் 35 வயதுடைய தம்பலகாமம் - 96 ஆம் கட்டை திஸ்ஸபுர பகுதியைச் சேர்ந்த ஜயந்த கொடிகார எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை இராணுவத்தின் 22 ஆவது படைப்பிரிவில் கடமையாற்றிய இவர் விடுமுறையில் வீட்டுக்குச் சென்ற நிலையிலேயே அவர் அரச மரச்சந்தியில் சடலமாக மீட்கப்பட்டதாகத் தெரியவருகின்றது. (இ-7)

## அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும்- பியால்

(களுத்துறை)

அரசியல்வாதிகளும் மற்றும் அரசாங்க அதிகாரிகளும் சகோதரத்துவத்துடன் செயற்பட வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் பியால் நிசாந்த தெரிவித்தார்.

களுத்துறை மாவட்ட இணைப்புக் குழுவின் தலைவர் பதவிக்கான கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்ட போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வு நேற்று களுத்துறை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

அரசாங்க அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் இணைந்து செயற்பட வேண்டியது மிகவும் அவசியமானது என அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-7)

## திருவருகைக்கால நற்செய்தி உபவாசக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

"எனது குடும்பத்தில் பிறக்கும் இயேசு" எனும் கருப்பொருளில் திருவருகைக்கால நற்செய்தி உபவாசக் கூட்டமும், குணமளிக்கும் ஆராதனையும், இன்று சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை மானிப்பாய் தூய அந்தோனியார் ஆலயத்தில் இடம்பெறும்.


இவ் ஆராதனைகள் கள்ளிகட்டைக்காடு, மன்னார் டிவைன் மெர்சி தியான மையக் குருக்களான அருட்தந்தை ரபேல் கூத்தூர், அருட்தந்தை சஜி வர்கீஸ் ஆகியோர் வழிநடத்துவர். (ஐ)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 80 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 120 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 250 | 400 | 200 | 210 | 300 |
| தக்காளி | 150 | 160 | 140 | 80 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 180 | 100 | 70 | 80 |
| கோவா | 100 | 150 | 100 | 80 | 120 |
| கரட் | 250 | 350 | 200 | 220 | 300 |
| பூசணி | 60 | 80 | 60 | 70 | 80 |
| புடோல் | 120 | 80 | 60 | 50 | 100 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 70 | 120 |
| சின்ன வெங்காயம் | 450 | 400 | 480 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 200 | 160 | 140 | 120 | 200 |
| பாகற்காய் | 200 | 350 | 160 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 60 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 80 | 80 | 160 |
| பயற்றங்காய் | 200 | 350 | 200 | 200 | 160 |
| லீக்ஸ் | 250 | 250 | 280 | 300 | 320 |
| பீற்றூட் | 200 | 100 | 200 | 70 | 200 |
| கறிமிளகாய் | 250 | 300 | 240 | 220 | 200 |
| முருங்கைக்காய் | 350 | — | 600 | — | — |
| போஞ்சி | 160 | 140 | 140 | 100 | 160 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 80 | 80 | 100 |
| கீரை - 1பிடி | 50 | 50 | 60 | 60 | 60 |
| தேசிக்காய் | 100 | 150 | 100 | 90 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45 | 50 | 45 | 30-50 |
| இராசவள்ளி | 250 | — | 250 | 210 | 250 |
| வெங்காயப்பூ | 350 | 300 | — | — | — |
| முள்ளங்கி | 150 | 100 | — | 40 | 120 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 50 | 30 | 40 |
| வல்லாரை | 20 | 40 | 20 | 30 | 20 |
| ஈரப்பலா | 60 | 100 | — | 150 | 100 |




# மெல்லப் பேசுங்கள்



மாதவனுக்கு நீண்ட நாட்களாக ஒரு குறை உண்டு. அவன் பேசினால் யாரும் கவனிப்பதில்லை என்பதுதான் அது.

அலுவலகத்தில் அவன் ஒரு குழுவை வழி நடத்துபவன். அவன் குழுவில் அவனைத் தவிர 5 பேர் இருந்தார்கள். அவ்வப்போது அவர்களிடம் தனித்தனியாகவும் அனைவரையும் கூட்டி வைத்தும் பேச வேண்டி இருந்தது.

அவன் பேசும்போது அவன் குழுவில் சிலர் தங்களுக்குள் பேசிக்கொள்வார்கள். அல்லது அவனை இடைவெட்டிப் பேசுவார்கள். அல்லது அவன் பேசும் விடயத்துக்குச் சம்பந்தம் இல்லாத விடயம் பற்றிக் குறுக்கே பேசுவார்கள்.

அதிகாரத்தினால் அவர்களை மிரட்ட முடியாது என்று அவனுக்குத் தெரியும்.

சிலசமயம் அவன் ஒரு குறிப்பிட்ட வேலையைக் குறிப்பிட்ட விதத்தில் செய்யச் சொன்னால். அதைச் சரியாகக் கேட்டுக் கொள்ளாமல் வேறு விதமாகச் செய்வார்கள். கேட்டால் "நீங்க அப்படியா சொன்னீங்க? சொறி" என்பார்கள்.

வேறு வழியின்றி. முக்கியமான செய்திகளை மின்னஞ்சல் மூலம் அனுப்ப ஆரம்பித்தான். தான் உட்கார்ந்திருக்கும் இடத்திலிருந்து பேசினாலே கேட்கக் கூடிய தூரத்தில் இருப்பவர்களுக்கு. வாயால் சொல்ல வேண்டிய செய்தியை மின்னஞ்சல் மூலம் அனுப்ப வேண்டியதை நினைக்க அவனுக்கு எரிச்சலாக இருந்தது. ஆனால் வேறு வழி தெரியவில்லை.

அதற்குப் பிறகு அவன் ஏதாவது சொன்னால் அவர்கள் "மெயில் அனுப்பிடுங்களேன்" என்று பதில் சொல்ல ஆரம்பித்தது அவனுக்கு மேலும் எரிச்சலூட்டியது.

அவன் அலுவலக்த்தில் புதிதாகச் சேர்ந்திருந்த ஒரு ஆலோசகர். இதுபோன்ற தகவல் தொடர்புப் பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வு கொடுப்பார் என்று பெயர் பெற்றிருந்தார். அவரைத் தேடிச் சென்றான்.

அவன் தன் பிரச்சினையைச் சொல்ல ஆரம்பித்ததுமே அவர் குறுக்கிட்டு. "மாதவன்! உங்கள் பிரச்சினை என்னவென்று எனக்குப் புரிந்துவிட்டது. ஏன் முகத்தை இப்படி வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்?" என்றார்.

"என் மூஞ்சி இயல்பாகவே அப்படித்தான் சேர் இருக்கும்!" என்றான் மாதவன் சிரிப்பை வரவழைத்துக்கொண்டு.

"இப்ப சிரித்தீர்களே. அது மாதிரி எப்பவுமே இருக்கப் பழகுங்கள்". "எப்படிப் பழகிறது?"

அவர் சில பயிற்சிகளைச் சொன்னார். "இது மாதிரி ஒரு மாதம் பயிற்சி செய்யுங்கள். பின்பு உங்கள் முகத்தில் எப்பவுமே இயல்பாக ஒரு சிரிப்பு இருக்கும். பின்பு உங்கள் டீம் மெம்பர்ஸ் உங்கள் பேச்சை கவனிக்க ஆரம்பிப்பார்கள்".

இரண்டு மாதம் கழித்து மாதவன் மீண்டும் ஆலோசகரைச் சந்தித்தான். "இப்ப எப்படி இருக்கு?" என்றார் அவர். "முன்பை விடப் பரவாயில்லை. ஆனா இபபவும் கொஞ்ச நேரத்துக்குப் பின்பு அவர்கள் கவனம் வேறு பக்கம் போயிடுது" என்றான் மாதவன்.

"சரி பார்க்கலாம்" என்றவர், அவருடைய உதவியாளர்கள் 4 பேரை அழைத்தார். "இவர்கள் தான் உங்க டீம் மெம்பர்ஸ்ன்னு வைத்துக்கொள்க. நீங்கள் உங்கள் டீம் மெம்பர்ஸ்"க்கு அவர்கள் செய்ய வேண்டிய வேலையைச் சொல்கிற மாதிரி இவர்களிடம் சொல்லுங்கள்" என்றார்.

மாதவன் அவர்களிடம் பேசினான். ஆலோசகர் சற்றுத் தள்ளி அமர்ந்து கொண்டு கவனித்தார். 15 நிமிடம் கழித்து "போதும்" என்று சொல்லி, தன் உதவியாளர்களை அவர்கள் இருக்கைகளுக்குப் போகச் சொன்னார்.

"மாதவன்! நான் கவனிச்சதை வைத்து ஒரு விடயத்தைச் சொல்கிறேன். நீங்கள் எதையும் சரியாகச் செய்ய வேண்டும் என்று நினைக்கிறவர். அதனால் நீங்கள் சொல்கிறதை மற்றவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்றால் உங்களுக்குக் கோபம் வருது. உங்கள் கோபம் உங்கள் வார்த்தைகளில் வெளிப்படுகிறது..."

"சேர்! நான் இவர்களிடம் கோபமா எதுவும்பேசவில்லையே?" என்றான் மாதவன்.

"நீங்கள் கோபமாகப் பேச வேண்டும் என்று நினைக்கவில்லை. ஆனால் உங்கள் பொறுமையின்மையும் கோபமும் உங்களை அறியாமல் உங்கள் வார்த்தைகளிலும் உங்கள் தொனியிலும் வெளிப்படுகிறது. கேட்கிறவர்களுக்கு இது பிடிக்காது. அவர்கள் காயப்பட்டதா உணர்வார்கள். பின்பு அவர்களை அறியாமலேயே உங்கள் பேச்சை கவனிக்கிறதை நிறுத்திடுவார்கள்"

"நான் என்ன செய்யணும்?"

"நீங்கள் ரெண்டு விடயங்களில உங்களை மாத்திக்க வேண்டியிருக்கு. நீங்கள் முதல் தடவை வந்தபோதே நான் இந்த மாதிரி ஒரு மாக் செஷன் வைத்து உங்கள் பிரச்சினையை முழுமையாகப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். அவசரப்பட்டு நீங்கள் மாத்திக்க வேண்டிய ஒரு விடயத்தை மட்டும் சொல்லிட்டு உங்களை அனுப்பிச்சுட்டேன்". "சேர்! நீங்கள் ஒரு நிபுணர். என்னைவிடப் பெரிய பதவியில் இருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் என்னிடம் உங்கள் தவறைப் பற்றிப் பேசுறீங்கள்!"

"இனிமையாப் பேசப் பழகிட்டா, பணிவு தானாவே வந்துவிடும். அல்லது பணிவாக இருக்கப் பழகிக்கிட்டா, பேச்சிலே இனிமை தானா வந்துவிடும்!"

"கிரேட் சேர்!" "நீங்கள் என்ன செய்ய வேணும் என்று உங்களுக்குத் புரிந்துவிட்டதா?"

"ஆம் சேர். நீங்கள் சொன்ன ரெண்டு விடயங்கள். முகத்தை இனிமையா வைச்சுக்கணும். இதுக்கு நான் பழகிக்கிட்டேன். ரெண்டாவது இனிமையாப் பேசணும். இதையும் பழகிக்கிறேன். ரொம்ப நன்றி சேர்".

"குட். ஐ திங்க் யூ வில் சக்ஸீட் திஸ் டைம். உங்க பிரச்சினை தீரலைன்னா ஒரு மாசம் கழித்து மறுபடி என்னை வந்து பாருங்க".

ஒரு மாதம் கழித்து மாதவன் மீண்டும் ஆலோசகரைப் பார்க்க வந்தான். ஆனால் இந்த முறை அவன் வந்தது அவருக்கு நன்றி தெரிவிப்பதற்காக!

குறள் 93

முகத்தான் அமர்ந்து இனிது
நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம்.

பொருள்:

மலர்ந்த முகத்துடன் நோக்கி, மனதிலிருந்து வரும் இன்சொற்களைப் பேசுவதே அறம்.

## விடுகதைகளும் விடைகளும்

- படபடக்கும், பளபளக்கும் மனதுக்குள் இடம் பிடிக்கும் அது என்ன?
  **பட்டாசு**
- உயிரில்லாதவனுக்கு உடம்பெல்லாம் நரம்பு. அது என்ன?
  **பாய்**
- மாமா போட்ட பந்தல் மறுபடி பிரிச்சா கந்தல் அது என்ன?
  **சிலந்தி வலை**
- கீழேயும் மேலேயும் மண் நடுவிலே அழகான பெண். அது என்ன?
  **மஞ்சல் செடி**
- சொன்ன நேரத்துக்கு தொண்டை கிழிய கத்துவான். அவன் யார்?
  **அலாரம்**
- உயிர் இல்லாத நீதிபதியிடம் ஒழுங்கான நியாயம்- அது என்ன?
  **தராசு**
- பூவோடு பிறந்து நாவோடு கலந்து விருந்தாவான் மருந்தாவான். அவன் யார்?
  **தேன்**
- நூல் நூற்கும் நெசவாளிக்கு கட்டிக்கொள்ள துணியில்லை அது என்ன?
  **சிலந்தி**
- உடம்பெல்லாம் சிவப்பு. அதன் குடுமி பச்சை அது என்ன?
  **தக்காளி**
- ஒட்டுத் திண்ணையில் பட்டுப் பாவாடை அது என்ன?
  **தோடு**
- தலைக்குள் கண் வைத்திருப்பவன் இவன் மட்டும்தான் அவன் யார்?
  **நுங்கு**

## குட்டித் தம்பி ஆடும் பந்து



குட்டித்தம்பி ஆடும் பந்து
குதித்தது குதித்து ஓடுதே
தட்டி தட்டி ஆடும் பந்து
தண்ணீருக்குள் விழுந்ததே
விழுந்த பந்து மேலே வந்து

மிதந்து மிதந்து வருகுதே
மிதக்கும் பந்தை எடுத்திடவே
அக்கா நீயும் ஓடிவா
மிதக்கும் பந்தை எடுத்திடவே
அக்கா நீயும் ஓடிவா

## பழமொழிகள்

- உருட்டும் புரட்டும் ஒடுக்கும் சிறப்பை.
- சொல்வல்லவனை வெல்லல் அரிது.
- கேட்டதெல்லாம் நம்பாதே? நம்பியதெல்லாம் சொல்லாதே?
- மழை விட்டாலும் தூவானம் விடவில்லை.
- செருப்பின் அருமை வெயிலில் தெரியும். நெருப்பின் அருமை குளிரில் தெரியும்.
- கண் குருடு ஆனாலும் நித்திரையில் குறையுமா?
- கிணற்றுக்குத் தப்பித் தீயிலே பாய்ந்தான்.
- முன்னவனே முன் நின்றால் முடியாத பொருள் உளதோ?
- நாய்க்கு வேலையில்லை. நிற்க நேரமும் இல்லை.
- முருங்கை பருத்தால் தூணாகுமா?
- புத்திமான் பலவான்.

ஒவ்வொரு பறவைக்கும் கடவுள்தான் உணவு கொடுக்கிறார். ஆனால் அவர் அதை கூட்டிற்குள் அடைப்பதில்லை. - ஹாலண்டு

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடன் நிவாரணம் வழங்குங்கள்

நாடு முழுவதிலும் பெரு மழை காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் கடும் பாதிப்படைந்துள்ளனர்.

அதிலும் குறிப்பாக வடபுலத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்குக் காரணமாக இரணைமடுக்குளத்தின் வான் கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளன.

இதுதவிர கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய இடங்களிலுள்ள குளங்கள் வான் பாயத் தொடங்கியுள்ளன.

ஆக, கடும் மழை வெள்ளப்பெருக்கால் பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்துள்ளனர்.

இவர்களுக்கான நிவாரணப் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

அத்துடன் க.பொ.த சா.தரப் பரீட்சை நடைபெற்று வருவதால், பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு விசேட ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பது மிகவும் அவசியமாகும்.

அதாவது வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட இடங்களில் உள்ள மாணவர்கள் பரீட்சை மண்டபங்களுக்குச் செல்வதற்கான ஒழுங்குகள், இடம்பெயர்ந்து பொதுஇடங்களில் தங்கியிருக்கின்ற மாணவர்கள் பரீட்சைக்கு ஆயத்தம் செய்யும் வகையில் தனியான இடங்களை ஏற்பாடு செய்தல் போன்ற விடயங்களில் அதிக கவனம் செலுத்துவது முக்கியமானது.

இதற்கு மேலாக, வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் குடும்ப வறுமையை ஏற்படுத்தப் போகின்றன.

குறிப்பாக விவசாய அழிவு, கால்நடைகளின் உயிரிழப்பு, குடியிருப்புகளின் சேதம் போன்றவை காரணமாக ஏற்பட்ட இழப்புக்களை ஈடுசெய்கின்ற வகையில் நிவாரணப் பணிகள் முன்னெடுக்கப்படுவது அவசியமாகும்.

பொதுவில் வடபகுதியில் ஏற்படுகின்ற வெள்ளப்பெருக்கு உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களின்போது ஏற்படுகின்ற பாதிப்புகளுக்கு உரிய நிவாரணம் கிடைப்பதில்லை என்ற கருத்து நிலை உண்டு.

அதாவது வெள்ளப்பெருக்கால் விவசாயச் செய்கை அழிவுறும்போது, கால்நடைகளின் உயிரிழப்பின்போது உரிய நிவாரணம் அல்லது இழப்பீடு வழங்கப்படாத நிலையில், குறித்த குடும்பங்கள் தம்து பொருளாதார மூலத்தை இழந்து வறுமையில் வாடுகின்ற பரிதாபத்துக்கு ஆளாகின்றன.

இதுதவிர, தமக்கு ஏற்பட்ட இழப்பீடுகளைப் பதிவு செய்வதற்காகப் பாதிக்கப்பட்டவர்கள் அலைந்து திரிகின்ற பரிதாபமும் அலைந்து திரிந்ததுதான் மிச்சம் என்பதான முடிவுகளும் பாதிக்கப்பட்ட மக்களை மேலும் வருத்துவதாக உள்ளது.

எனவே வெள்ளப்பாதிப்புக்கு ஆளானவர்களுக்கு ஏற்பட்ட இழப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு அவர்களுக்கான நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும்.

அப்போதுதான் அவர்கள் தமது தொழில் முயற்சிகளில் நம்பிக்கையோடு ஈடுபடுவர்.

எனவே இதுவிடயத்தில் அரசாங்கமும் அரச அதிகாரிகளும் அதீத கவனம் செலுத்த வேண்டும் என்பது நம் தாழ்மையான கோரிக்கை.

# தமிழ் அரசியல் கைதிகள் எவரும் விடுவிக்கப்படவில்லை

## விடுதலையான கோமகன் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் எவரும் விடுவிக்கப்படவில்லை. அவர்கள் விடுவிக்கப்படும் நாளுக்காக காத்திருக்கின்றனர் என விடுவிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளில் ஒருவரான எஸ்.கோமகன் தெரிவித்தார்.

தமிழ் அரசியல் கைதிகள் ஏழு பேர் விடுதலையானதாக வெளியான செய்தி தொடர்பில் நேற்று யாழ். ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் புனர்வாழ்வளிக்கப்பட்டு 12 ஆயிரம் முன்னாள் போராளிகள் விடுவிக்கப்பட்டதன் பின்னர் எந்தவொரு முன்னாள் போராளிகளும் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்படவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வின் ஆட்சிக்காலத்தின் போது பொதுமன்னிப்பின் கீழ் தமிழ் அரசியல் கைதி ஜெனிற்றன் விடுவிக்கப்பட்டாரே தவிர சிறையில் உள்ள வேறு எவரும் புனர்வாழ்வுக்குட்படுத்தப்பட்டு விடுவிக்கப்படவில்லை.

தடுப்புக் காவலிலுள்ள தமிழ் அரசியல்கைதிகள் தமது குடும்ப நிலை காரணமாக வழக்குகளில் இருந்து விடுபடுவதற்கு இழைக்கப்படாத குற்றங்களையும் இழைத்ததாகக் கூறி குற்ற ஒப்புதல் வாக்குமூலம் வழங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் தாய் நாட்டிற்கான தேசிய வீரர்கள் அமைப்பு கடந்த வாரம் தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டுமென தற்போதைய ஜனாதிபதி, கோட்டபய ராஜபக்ஷவிடம் வலியுறுத்தியுள்ளது.

அதுமட்டுமல்லாது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் நாமல் ராஜபக்ஷ நல்லாட்சி அரசின் காலத்தில் சிறையிலுள்ள தமிழ் அரசியல்கைதிகளைச் சந்தித்தபோது தமது ஆட்சி வரும்போது அரசியல் கைதிகளின் விடுதலையைச் சாதகமாகப் பரிசீலிப்போம் என உறுதி வழங்கியிருந்தார்.

கடந்த நல்லாட்சி அரசில் அங்கம் வகித்தவர்கள். தமக்குக் கிடைத்த பொன்னான சந்தர்ப்பங்களை சரிவரப் பயன்படுத்தாத நிலையில் ஒவ்வொரு ஆட்சி மாற்றத்தின் போதும் தமிழ் அரசியல் கைதிகள் தமக்கு விடுதலை கிடைக்காதா? என்ற ஏக்கத்துடன் சிறைகளிலே தவிக்கின்றனர்.

தற்போதைய கணக்கெடுப்பின் பிரகாரம் மகசின் சிறைச்சாலையில் 75 பேர் அநுராதபுரம் சிறைச்சாலையில் 6 பேர், வெலிக்கடைச் சிறைச்சாலையில் 3 பேர், மகர, நீர்கொழும்புச் சிறைச்சாலையில் 4 பேர் மற்றும் கொழும்பு சீ.ஆர்.பி சிறைச்சாலையில் ஒருவருமாக 89 தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 36 பேர் தண்டனை பெற்றவர்களாகவும் 18 பேர் மேன்முறையீடு செய்த நிலையிலும் 12 பேர் ஆயுள் தண்டனைக் கைதிகளாகவும் சிறைகளிலே இருக்கின்றனர். எனவே இவர்களின் விடுதலை தொடர்பில் அரசியல்வாதிகள் தமது உறுதிமொழிகளை நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கையுடன் காத்திருக்கும் அதேவேளை அவர்களின் நம்பிக்கை நிறைவேறவேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாக உள்ளதென அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

வடக்கு பிரதம செயலாளர்

## கடமையின் நிமிர்த்தமே வெளிநாடு சென்றிருந்தார்

பதில் பிரதம செயலாளர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு பிரதம செயலாளரின் வெளிநாட்டு விஜயமானது உத்தியோகபூர்வ கடமை நிமித்தமான ஒன்றாகும். வடக்கு பிரதம செயலாளரின் குறித்த விஜயத்தினால் நிர்வாகச் செயற்பாடுகளுக்கு எவ்வித தடங்கலும் ஏற்படாத வகையில் ஜனாதிபதி செயலகத்தினால் பதில் பிரதம செயலாளர் ஒருவர் நியமிக்கப்பட்ட நிலையிலேயே ஜனாதிபதியின் செயலாளரது அனுமதியின் மீது குறித்த உத்தியோகபூர்வ பயணமாக அமைந்தது என வட மாகாண பதில் பிரதம செயலாளர் ஆர்.எஸ். துரை ராஜா தெரிவித்தார்.

04/12/2019 அன்று வலம்புரியின் 21ஆம் பக்கத்தில் வெளிவந்த வடக்கில் ஆளுநர், பிரதம செயலாளர் இல்லை முடங்கும் நிர்வாகச் செயற்பாடுகள் என வெளிவந்த செய்தி தொடர்பில் வடக்கு மாகாண பதில் பிரதம செயலாளர் ஆர்.எஸ்.துரைராஜா அனுப்பி வைத்த விளக்கக் கடிதத்தில் தெளிவாக்கப்பட்டுள்ளது. அக்கடிதம்வருமாறு.

தங்கள் 04/12/2019 ம் திகதி நாளிதழின் 21 ஆம் பக்கத்தில் பிரசுரமான "வடக்கில் ஆளுநர், பிரதம செயலாளர் இல்லை முடங்கும் நிர்வாகச் செயற்பாடுகள்" எனத் தலைப்பிடப்பட்ட செய்தியின் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

மேற்படி செய்தியின் பந்தி 04 இல் "வடக்கு மாகாண அமைச்சுக்கள், திணைக்களங்களால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களுக்கான கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கும் நிர்வாக உத்தரவுகளை கண்காணிப்பதற்கும் செயற்படுத்துவதற்கும் வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் இலங்கையில் இல்லாது வெளிநாடு சென்றுள்ளமையினால் வினைத்திறனான செயற்பாட்டினை முன்னெடுக்க முடியாதுள்ளது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச் செய்தி பொது மக்களிடம் வட மாகாண நிர்வாகம் தொடர்பிலும் பொறுப்பான அதிகாரிகள் தொடர்பிலும் தவறான தகவல்களைக் கொண்டு சேர்ப்பதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்துகின்றது.

பிரதம செயலாளர் அவர்களின் குறித்த விஜயமானது உத்தியோகபூர்வ கடமை நிமித்தமான ஒன்றாகும். பிரதம செயலாளர் அவர்களின் குறித்த விஜயத்தினால் நிர்வாகச் செயற்பாடுகளுக்கு எவ்வித தடங்கலும் ஏற்படாத வகையில் ஜனாதிபதி செயலகத்தினால் பதில் பிரதம செயலாளர் ஒருவர் நியமிக்கப்பட்ட நிலையிலேயே ஜனாதிபதியின் செயலாளரது அனுமதியின் மீது குறித்த உத்தியோகபூர்வ பயணமாக அமைந்தது.(ம-3)

## பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு வாரம்

16


யாழ்.சமூக செயற்பாட்டு மையம்
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)
பெண்களே சமூகத்தை உருவாக்கும் உண்மையான சிற்பிகள்.
JSAC

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

அமைதியை வெளியே தேடினால் அது ஒருபோதும் கிடைக்காது. -கிறிஸ்டின் வொன்ஸ்வேன்

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### எல்லையற்ற இன்பம்



இந்தப் பிரபஞ்சத்தில் நாம் காணும் அனைத்தின் அடிப்படையும் சுதந்திரத்திற்கான ஒரு போராட்டமே. இந்த இயல்பின் உந்து வேகத்தால்தான் மகான் பிரார்த்திக்கிறார்.

செயலின் பாதை சரியான திசையில் இல்லை என்றால் அதை நாம் தீமை என்கிறோம். இதே உந்து வேகம் சரியான உயர்ந்த வழியில் வெளிப்படுமானால் அதை நன்மை என்று கூறுகிறோம். ஆனால் இரண்டிலும் உந்துவேகம் ஒன்றுதான். சுதந்திரத்திற்கான போராட்டம்தான்.

தான் கட்டுண்ட நிலையில் இருப்பதை அறிந்து மகான் வேதனை கொள்கிறார். அதிலிருந்து விடுபட விரும்புகிறார். அதற்காக இறைவனை வணங்குகிறார்.

குறிப்பிட்ட சில பொருட்கள் தன்னிடம் இல்லையென்பதால் வேதனை கொள்கிறான். திருடன் அந்தத் தேவையைப் பூர்த்தி செய்து அதிலிருந்து விடுபட விரும்புகிறான். அதனால் திருடுகிறான். எனவே உணர்வுள்ளதாகட்டும், உணர்வற்றதாகட்டும். இயற்கை அனைத்திற்கும் ஒரே இலட்சியம் சுதந்திரம்தான். அறிந்தோ, அறியாமலோ ஒவ்வொன்றும் அந்தச் சுதந்திரத் திற்காகவே போராடிக் கொண்டிருக்கின்றன.

ஆனால் ஒரு மகான் தேடுகின்ற சுதந்திரம், திருடன் தேடுகின்ற சுதந்திரத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டது. மகான் நாடுகின்ற சுதந்திரம் அவரை எல்லையற்ற இன்பத்திற்கு விவரிக்க முடியாத ஆனந்தத்திற்கு அழைத்துச் செல்கிறது. திருடன் நேசிக்கின்ற ஒன்றோ அவனது ஆன்மாவை மென்மேலும் பல்வேறு சங்கிலிகளால் கட்டிச் சிறையிலிடுகிறது.

# கரிசனை காட்டாத அமெரிக்கா உதவி செய்த பிரித்தானியா

## புறப்பட்டனர் இலங்கை வீரர்கள்



இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு பிரித்தானியா உதவி செய்து பிரச்சினையைத் தீர்த்துள்ளது.

இலங்கை கிரிக்கெட்டின் 19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் வீரர்களில் ஐந்து பேருக்கு இங்கிலாந்து வழியாக மேற்கிந்தியத்தீவுகளுக்கு பயணம் செய்ய விசா வழங்கி பிரித்தானியா உயர் ஆணையம் உதவி செய்துள்ளது.

பிரித்தானியா உயர் ஆணையம் ஐந்து வீரர்களுக்கு விசா வழங்கியிருப்பதாகவும் அவர்கள் 19 வயதுக்குட்பட்ட தலைமை பயிற்சியாளர் ஹஷன் திலகரத்னவுடன் வெள்ளிக்கிழமை கரீபியன் பயணம் செய்வார்கள் என்றும் இலங்கை கிரிக்கெட் செயலாளர் மோகன் டி சில்வா உறுதிப்படுத்தினார்.

மீதமுள்ள அணி அமெரிக்கா வழியாக மேற்கிந்தியத்தீவுகளுக்கு பயணிக்கும். இந்த அணியில் 15 வீரர்கள் மற்றும் ஒன்பது அதிகாரிகள் உள்ளனர்.

19 வயதிற்குட்பட்ட ஏழு வீரர்களின் விசாவை அமெரிக்கத் தூதரகம் மறுத்துவிட்டது. இதனால் சுற்றுப்பயணம் உண்மையில் முன்னேறுமா? என்று பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியது.

எவ்வாறாயினும், இந்த பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டுள்ளது மற்றும் 19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் வீரர்கள் மேற்கிந்திய தீவுகள் சென்று 19 வயதுக்குட்பட்ட ஒருநாள் முத்தரப்பு தொடரில் பங்கேற்க மேற்கிந்தியத்தீவுகள் மற்றும் இங்கிலாந்துடன் கலந்து கொள்வார்கள்.

இந்த போட்டி ஜனவரி மாதம் தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. 19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் உலகக் கோப்பைக்கு முன்னோட்டமாகக் கருதப்படுகிறது. (க)

# சூதாட்டம் சட்டபூர்வமானது

ஆசிய நாடுகளை காட்டிலும் ஐரோப்பிய நாடுகளே கால்பந்தாட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றன. அதே நேரத்தில் விளையாட்டை வைத்து சட்டவிரோதமாக சூதாட்டங்கள் நடப்பதையும் மறுப்பதற்கில்லை.

அதிலும் கிரிக்கெட் சூதாட்டங்கள் பற்றி சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

பெரும்பாலான நாடுகளில் சூதாட்டங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில். உஸ்பெகிஸ்தான் நாட்டில் விளையாட்டுச் சூதாட்டங்கள் வரும் 2021ஆம் ஆண்டு முதல் சட்டபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளது.

இதுதொடர்பாக உஸ்பெகிஸ்தான் ஜனாதிபதி ஷவ்காட் மிர்ஜியோயெவ் கையெழுத்திட்ட ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

இதன்மூலம். கால்பந்து விளையாட்டை வளர்ப்பதற்கான பல குறிக்கோள்களை வகுப்பது, ரசிகர்கள் மற்றும் முதலீட்டாளர்களை ஈர்ப்பது. குழந்தைகளுக்கான விளையாட்டுப் பள்ளிகளைத் திறப்பது மற்றும் தேசிய லீக் விளையாட்டுகளில் வீடியோ உதவி நடுவரை அறிமுகப்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ள முடியும்.

மேலும். 2030 வரை உஸ்பெகிஸ்தான் நாட்டு கால்பந்து விளையாட்டின் வளர்ச்சிக்கான கட்டமைப்பை மேம்படுத்தவும் இந்த ஆணை வழிவகுக்கிறது.

முன்னதாக. கால்பந்து விளையாட்டை அனைவரும் விரும்பும் வகையில் மாற்றுவதற்கும் அதை பிரபலப்படுத்த நிதி திரட்டுவதற்கும் விளையாட்டு சூதாட்டங்களை சட்டபூர்வமாக்கலாம் என சில உஸ்பெகிஸ்தான் அதிகாரிகள் பேசியிருந்தது குறிப்பிடத்தக்கது. (க)


**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**


# 116 கி.மீற்றருக்கே தாக்குப்பிடிக்காதவர் 153 கி.மீற்றருக்கு என்ன செய்வார்

## வறுத்தெடுக்கும் ரசிகர்கள்




பாகிஸ்தான் முன்னாள் கிரிக்கெட் வீரரான அப்துல் ரசாக் இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ராவை கிண்டல் செய்யும் விதமாக சமீபத்தில் நடந்த பேட்டி ஒன்றில் பேசினார். 'கிளைன் மெக்ராத். வாசிம் அக்ரம் போன்ற மிகச்சிறந்த பவுலர்களுக்கு எதிராக நான் விளையாடி இருக்கிறேன். என்னைப் பொறுத்தவரை இந்தியாவின் ஜஸ்பிரித் பும்ரா ஒரு குழந்தை போவுலர்.

இப்போது விளையாடி இருந்தால் அவரது பந்து வீச்சுக்கு எதிராக நான் ஆதிக்கம் செலுத்தி. அடித்து நொறுக்கியிருக்க முடியும்' என ரசாக் கூறினார்.

அவரது பேச்சுக்கு இந்திய கிரிக்கெட் ரசிகர்களும் பும்ராவின் ரசிகர்களும் சமூக வலைத்தளங்களில் பதிலடி அளித்து ரசாக்கை கலாய்த்து வருகின்றனர்.

இந்திய வேகப்பந்து வீச்சாளர் பும்ரா சராசரியாக மணிக்கு 142 கி.மீ.வேகத்தில் பந்து வீசக்கூடியவர். அதிகபட்சமாக 153 கி.மீ. வேகத்திலும் வீசியுள்ளார். கடந்த உலகக்கோப்பை போட்டியில் கூட அனைத்து நாட்டு வீரர்களும் பும்ராவின் பந்து வீச்சில் ஓட்டம் எடுக்க சற்றுத் திணறினர். அவரைப் பார்த்து குழந்தை பவுலர் என்று ரசாக் கூறியிருப்பது தான் இந்த ஆண்டின் சிறந்த ஜோக் என நெட்டிசன்கள் கலாய்த்து வருகின்றனர்.

மற்றொரு ரசிகர் கடந்த 2011 உலகக் கோப்பை அரையிறுதிப் போட்டியில் முனாப் படேல் பந்து வீச்சில் அப்துல் ரசாக் (3 ஓட்டங்கள்) கிளீன் போல்ட் ஆனார்.

முனாப் படேல் 116 கி.மீ. மணி வேகத்தில் பந்து வீசிய போதே போல்ட் ஆனவர், பும்ரா பந்து வீச்சை அடித்து நொறுக்குவேன் என கூறுவது மிகவும் வேடிக்கையானது எனக் கூறியுள்ளார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# மைதானத்தில் மஜிக் செய்த வீரர்

தென்னாபிரிக்க சுழற் பந்து வீச்சாளர் தப்ரைஸ் ஷம்ஸி, விக்கெட் எடுத்ததை மஜிக் செய்து கொண்டாடும் வீடியோ காட்சி இணையத்தில் வைரலாக பரவி வருகிறது.

டிசெம்பர் 4 ஆம் திகதி புதன் கிழமையன்று. போலந்து பூங்காவில் டர்பன் ஹீட் அணிக்கு எதிராக பார்ல் ராக்ஸ் அணியில் விளையாடிக் கொண்டிருந்த ஷம்ஸி - தனது விக்கெட்டுகளில் ஒன்றைக் கொண்டாட அற்புதமான மஜிக் தந்திரத்துடன் வெளியே வந்து ரசிகர்களை திகைக்க வைத்தார்.

போட்டியின் எட்டாவது ஓவரில் ஷம்ஸி வீசிய பந்தினை. விஹாப் லுபே மைதானத்திற்கு



வெளியே தூக்கி அடிக்க முயற்சித்தார்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக அந்த பந்து ஹார்டஸ் வில்ஜோயனின் கைகளில் சிக்கி விக்கெட்டை பறிகொடுத்தது.

இதனை கொண்டாடும் விதமாக ஷம்ஸி தன்னுடைய சட்டைப் பையில் இருந்து ஒரு துணியை எடுத்து. அதனை குச்சியாக மாற்றி மஜிக் செய்தார். அங்கிருந்த ரசிகர்கள் அனைவருமே அதனை பெரும் ஆச்சர்யத்துடன் பார்த்துள்ளனர். (க)

# இலங்கை அணியின் பயிற்சியாளராகிறார் பாகிஸ்தான் முன்னாள் பயிற்சியாளர்


அவுஸ்திரேலியா மற்றும் பாகிஸ்தான் அணியின் முன்னாள் பயிற்சியாளரான மிக்கி ஆர்த்தர் இலங்கை அணியின் தலைமை பயிற்சியாளராக நியமிக்கப்படவுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக இருந்த சந்திக ஹதுருசிங்க பதவி விலகிய நிலையில், இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக கடந்த ஓகஸ்ட் மாதம் தொடக்கம் முதல் இலங்கை கிரிக்கெட் அணியின் பந்துவீச்சு பயிற்சியாளரான ருமேஷ் ரத்நாயக்க இருந்து வருகிறார்.

இந்நிலையில், மிக்கி ஆர்த்தர் இலங்கை கிரிக்கெட் அணி பற்றி அறிந்து கொள்ள இலங்கை வீரர்களுடன் சிறிது காலம் இணைந்திருக்க வேண்டும் என்று கூறிய காரணத்தினால் ருமேஷ் ரத்நாயக்கவே பாகிஸ்தான் டெஸ்ட் தொடர் நிறைவுக்கு வரும் வரை இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக உள்ளார்.

அதேவேளை பாகிஸ்தான் செல்லும் மிக்கி ஆர்த்தர் பாகிஸ்தான் சுற்றுப் பயணத்தில் இலங்கை அணியின் ஆலோசகர்களில் ஒருவராக காணப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிக்கி ஆர்த்தர் கடந்த 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் தென்னாபிரிக்காவின் தலைமைப் பயிற்சியாளராக செயற்பட்டார்.



அதன்பின். 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு வரையில் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக இருந்தார்.

தொடர்ந்து. மிக்கி ஆர்த்தர் கடந்த மூன்று வருடங்களுக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## சீரற்ற காலநிலையால்...

நாட்டில் ஏற்பட்ட சீரற்ற கால நிலையைத் தொடர்ந்து வடக்கில் பெய்யும் தொடர்மழையால் 17 ஆயிரத்து 62 குடும்பங்களை சேர்ந்த 55 ஆயிரத்து 453 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்மழையால் குளங்களின் நீர்மட்டம் அதகரித்துள்ளதுடன், தாழ் நிலப்பகுதிகள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன.

யாழ் மாவட்டத்தில் ஆயிரத்து 874 குடும்பங்களை சேர்ந்த 4 ஆயிரத்து 298 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 5 நலன்புரி நிலையங்களில் 57 குடும்பங்களை சேர்ந்த ஆயிரத்து 198 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 6841 குடும்பங்களை சேர்ந்த 22262 பேர் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர். கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய நான்கு பிரதேச செயலக பிரிவுகளிலும் மக்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 21 நலன்புரி நிலையங்களில் 920 குடும்பங்களை சேர்ந்த 2906 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளதுடன். மாவட்டத்தில் 37 வீடுகள் பகுதியளவில் சேதமாகியுள்ளது

வவுனியா மாவட்டத்தில் 283 குடும்பங்களைச் சேர்ந்த 887 பேர் பாதிப்படைந்துள்ளதுடன் 55 வீடுகள் பகுதியளவு பாதிப்படைந்துள்ளன. மேலும் வவுனியா வடக்கில் மருதோடை, இராமனூர், பழையவாடி, புளியங்குளம் உள்ளிட்ட பகுதிகளில் 4 நலன்புரி நிலையமும், செட்டிகுளம் அடைக்கலமாதா வித்தியாலயத்தில் ஒரு நலன்புரி நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது. நலன்புரி நிலையங்களில் 152 குடும்பங்களைச் சேர்ந்த 466 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 9ஆயிரத்து 297 குடும்பங்களை சேர்ந்த 30 ஆயிரத்து 20 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

15 நலன்புரி நிலையங்களில் 323 குடும்பங்களை சேரந்த ஆயிரத்து 60 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் 594 குடும்பங்களை சேர்ந்த 2 ஆயிரத்து 154 பேர் 6 நலன்புரி நிலையங்களில் 80 குடும்பங்களை சேரந்த ஆயிரத்து 389 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (ம-3,9,10)

# பொறுப்புக்கூறல் விடயத்தில் எமது அழுத்தம் தொடரும்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

(கொழும்பு)

புதிய அரசாங்கம் வடக்கு கிழக்கில் எமது மக்களை அடையாளப்படுத்தி அபிவிருத்தி வேலைத் திட்டங்களை செய்தால் அதனை நாம் ஆதரிப்போம் எனத் தெரிவித்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, எனினும் பொறுப்புக்கூறல் விடயத்தில் எமது அழுத்தங்களை முழுமையாக பிரயோகிப்போம் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பொறுப்புக் கூறல் விடயங்களில் இலங்கையின் புதிய அரசாங்கம் கொண்டுள்ள நிலைப்பாடுகள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கையாளவுள்ள காரணிகள் குறித்து தெரிவிக்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்க்கை அரசாங்கம் பொறுப்புக்கூறலை முன்னெடுக்க வேண்டும் என்ற பிரேரணையை நிறைவேற்றிய நாடுகளுடன் நாம் இப்போதே பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளோம்.

இந்த நகர்வு அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் நல்லதொரு முடிவை கொண்டுவரும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் இதன்போது கூறினார். (ம-3)

## 21 மாவட்ட...

பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 35 ஆயிரத்து 906 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்த அனர்த்தம் காரணமாக நால்வர் உயிரிழந்துள்ளதுடன், 6 பேர் காயமடைந்தும், ஒருவர் காணாமல்போயும் உள்ளனர். இதேவேளை 20 வீடுகள் பகுதியளவிலும் 943 வீடுகள் முழுமையாகவும் சேதமடைந்தும் உள்ளது.

மேலும் 2,609 குடும்பங்களைச் சேர்ந்த 8,553 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

பதுளை, மொனராகலை, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, யாழ்ப்பாணம், கேகாலை, இரத்தினபுரி, கண்டி, நுவரெலியா, மாத்தளை, அனுராதபுரம், பொலன்னறுவை, புத்தளம், குருநாகல், அம்பாந்தோட்டை மற்றும் மாத்தறை உள்ளிட்ட மாவட்டங்களே இவ்வாறு சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## பளுதூக்கல்...

விஜயபாஸ்கர் ஆர்ஷிகா வெள்ளிப் பதக்கத்தினை சுவீகரித்துள்ளார்.

13 வது தெற்காசிய விழா நேபாளம் தலைநகர் காத்மண்டுவில் இடம்பெற்று வருகின்றது.

இந்த நிலையில் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற 64KG பளுதூக்கல் போட்டியின் போதே. யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஆர்ஷிகா வெள்ளிப் பதக்கத்தினை சுவீகரித்துள்ளார்.

இதேவேளை, தெற்காசிய விளையாட்டு விழா போட்டி வரலாற்றில் இலங்கை சார்பாக பளுதூக்கல் போட்டியில் பங்கேற்ற முதல் தமிழ் வீராங்கனையாக விஜயபாஸ்கர் ஆர்ஷிகா வரலாறு படைத்துள்ளார். (ம-3)

## யாழ்.போதனா...

என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

கடந்த திங்கட்கிழமை வாழைச்சேனையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு லொறியில் விறகு ஏற்றி வந்த குறித்த நபர் காய்ச்சல் காரணமாக கடந்த புதன்கிழமை இரவு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் நுரையீரலில் கிருமித்தொற்று ஏற்பட்டதன் காரணமாக உயிரிழந்துள்ளதாக பிரேத பரிசோதனையிலிருந்து தெரிய வருகிறது. இவரின் மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## கொடிகாமம் பாலா...

அனுமதிக்கப் பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,114)

## இயற்கை அனர்...

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சமைத்த உணவு உள்ளிட்ட தற்காலிக நிவாரணங்களை வழங்குவதற்கு இந்த நிதி பயன்படவுள்ளதாக கூறப்படுகின்றது.

இந்த நிதியை ஒதுக்கீடு செய்வதற்கான நடவடிக்கையை, அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் மகிந்த சமரசிங்க முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-10,60,100)

## மோ.சைக்கிளிலிருந்து தவறி...

நேற்று உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவத்தில் மன்னார் சிலாவத்துறையைச் சேர்ந்த பாரூக் சன்பரா (வயது 39) என்ற ஆசிரியையே உயிரிழந்தவராவார். இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கடந்த 27ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் உறவினர்களுடன் பின் இருக்கையில் அமர்ந்து பாடசாலை சென்றுகொண்டிருந்த போது மாடு குறுக்கே கடந்த போது திடீரென மோட்டார் வானத்தை நிறுத்தியபோது தடுமாறி குறித்த ஆசிரியை கீழே விழுந்து மயங்கியுள்ளார்.

மயக்கமடைந்த நிலையில் சிலாவத்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கடந்த 28ஆம் திகதி யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை காலை குறித்த ஆசிரியை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவரின் மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரணவிசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## கே.கே.எஸ் கட...

குறித்த இளைஞன் கடற்கரைக்கு நண்பர்களுடன் நீராட சென்றிருந்த வேளையிலேயே குறித்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது. (ம-3)

## பட்டப்பகலில்...

துறை பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஐயனார் கலட்டி பகுதியில் நேற்றுவெள்ளிக்கிழமை முற்பகல் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஒன்றரை பவுண் நிறையுடைய தங்கச் சங்கிலி மற்றும் இரண்டு சோடி தோடு மற்றும் 5 ஆயிரம் ரூபாய் பணம் திருடப்பட்டுள்ளன. (ம-3,60)

## லண்டன் தூதரகத்தில் தமிழர்...

கத்தின் எதிரில் ஆர்ப்பாட்டம் செய்த தமிழ் மக்களிற்கு அச்சுறுத்தல் விடுத்ததாக, அப்போது தூதரக பாதுகாப்பு பிரிவில் பணியாற்றிய பிரிகேடியர் பிரியங்க மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

அது தொடர்பாக வழக்கு தொடரப்பட்டபோது, நீண்ட சட்டப் போராட்டத்தை இலங்கை நடத்தியது. முன்னர் அவர் இராஜதந்திர விலக்கை பெற்றிருந்தபோதும், இந்த வழக்கை மீள விசாரித்த நீதிமன்றம் நேற்று அவர் குற்றவாளியென தீர்ப்பளித்துள்ளது.

பெப்ரவரி 4, 2018 அன்று தொண்டையை வெட்டும் சைகைகள் செய்யப்பட்டன என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை என்று தலைமை நீதவான் எம்மா அர்பூட்நாட் தனது தீர்ப்பில் தெரிவித்தார்.

போராட்டக்காரர்களிற்கு எதிராக அவரது உடல்மொழி திமிர் பிடித்ததாக இருந்ததாகவும் நீதிபதி தெரிவித்திருந்தார். அவருக்கு 2,400 ஸ்ரேர்லிங் பவுண்ஸ் அபராதம் விதிக்கப்பட்டது. (ம-3)

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 813
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2019.12.06
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 70,982,265/-
வெற்றி இலக்கங்கள் 04 18 20 34
ஆங்கில எழுத்து B
அபிவிருத்தி லொத்தர் சபை

சீட்டிழுப்பு வாரம் 529
வர்ணம் பச்சை
திகதி 06/12 2019 வெள்ளிக்கிழமை
M 30 38 44 46
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 80,281,915
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
திகதி 06/12/2019 வெற்றி வாரம் 2699 வர்ணம் கடும்நீலம்
வெற்றி இலக்கங்கள் சிம்மம் 12 15 35 59
சனிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 4,113,452
2019/12/07 ம் திகதி சனிக் கிழமை இளம் நீலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு: 1919

සංවර්ධන වාසනාව அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 303
சீட்டிழுப்பு திகதி 06.12.2019 சிகப்பு
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 22 46 49
விதி எண் 3
அடுத்த சுப்பர் பரிசுப்பொதி ரூ. 48,078,368
2019.12.11 ம் திகதி புதன் கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு: 0114 824 824 www.dlb.lk

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 06-12-2019
சீட்டிழுப்பு இலக்கம் 2322
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 22 33 53 61
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2019/12/06
சீட்டிழுப்பு இலக்கம் 4064
ஆங்கில எழுத்து F
வெல்லப்பட்ட இலக்கங்கள் 6 1 6 9 8 8
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 2019/12/06
சீட்டிழுப்பு இலக்கம் 468
வெற்றி எழுத்து G சுப்பர் இலக்கம் 17
வெற்றி இலக்கங்கள் 16 28 54 55

தன நிதானய
திகதி - 2019/12/06
சீட்டிழுப்பு இலக்கம் - 235
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கங்கள் 4 5 49 64
NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324

## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட், பேரன்ஸ், ஊர்ச்சேவல் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம்.

**நந்தினி பாம்** (C-8443)

இராச வீதி, கல்வியங்காடு. தொ.பே: 0779683028



## தேவை

பகுதி நேர வேலைக்கு பெண் உதவியாளர் (ரியூசன்) தேவை.

தொடர்பு (C-8440)

**077 774 2942**



## ஆசிரியர் தேவை

தரம் 1 - 5 வரை ஆங்கிலம் உட்பட ஏனைய பாடங்களும் கற்பிக்கும் திறன் கொண்டவர்கள் விரும்பத்தக்கது. (1378)

இடம்: மல்லாகம் (தனியார் கல்வி நிலையம்)

தொடர்பு:- **0774488222**



## விரைவு பொதிகள் சேவை

### விசேட விலை குறைப்பு



DELIVERY IN 3-5 DAYS

UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
(C-8115)

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● மானிப்பாய் ● திருகோணமலை ● சாவகச்சேரி ● சுன்னாகம் ● மருதங்கேணி

0768226240

V2 TRAVELS



## ரலண்ட் அக்கடமி

மல்லாகம் | விசுவமடு

**தரம் 1 - 11 வரை**

ஆங்கிலம், சிங்கள மொழிகள் எழுத, பேச பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

தமிழ் மொழியில் கதைத்தல் வரையறுக்கப்பட்டுள்ளது

ஆரம்பம்:-

**07.12.2019 பி.ப 3 மணி**

தொடர்பு (1378)

**077 214 0675**


# மோசடி செய்த கணக்காளருக்கு 367 ஆண்டுகள் சிறைத்தண்டனை

## கொழும்பு உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

நிதி மோசடிக் குற்றச்சாட்டில் கணக்காளர ஒருவருக்கு 367 ஆண்டு சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார் கொழும்பு உயர்நீதிமன்ற நீதிபதி சசி மகேந்திரன். அத்துடன் 19 இலட்சம் ரூபாய் அபராதமும் விதித்தார்.

ஹிக்கடுவையிலுள்ள நிறுவனமொன்றில் கணக்காளராக செயற்பட்ட லியனகே நந்தசிறி என்பவருக்கே நேற்று இந்த தண்டனை வழங்கப்பட்டது.

2000 - 2001 ஆம் ஆண்டு காலப் பகுதியில் விளையாட்டு உபகரணங்கள் விற்பனை நிலையமான அந்த வர்த்தக நிலையத்திலிருந்து 21,99 130.66 ரூபாயை அவர் மோசடி செய்திருந்தார்.

பிரதிவாதி மீது 19 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. முதலாவது குற்றச்சாட்டிற்கு 7 ஆண்டுசிறைத் தண்டனையும் ஏனைய 18 குற்றச்சாட்டுக்களிற்கும் தலா 20 ஆண்டுகள் வீதம் 360 ஆண்டுகளும் சிறைத் தண்டனை விதித்தார். அத்துடன், 19 இலட்சம் ரூபாய் அபராதமும் விதித்தார்.

பிரதிவாதி தற்போது தலை மறைவாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)


## ALLIANCE FRANÇAISE DE JAFFNA-

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

### af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் **FRENCH EMBASSY**யின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் **ALLIANCE FRANÇAISE** மட்டுமே
- அங்கிகரிக்கப்பட்ட **CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)**
- யாரும் படிக்கலாம்.**www.ambafrance-lk.org** (1379)

**021 222 8093** புதிய விலாசம் No.17, Kandy Road, Jaffna.



## சாவகச்சேரியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=

சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.



**076 443 1576**

### அருள்

இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (C-8397)



## ENGLISH GRAMMAR
### THROUGH FORMULATION TECHNIQUE

கட்டடங்களுக்கு பலமான அஸ்திவாரம் அவசியமாவதுபோல் ஆங்கிலத்தில் சிறந்த புலமை பெற காலங்கள் (TENSE) பற்றிய அறிவு அவசியமானதாகும்.

தற்போது FORMULATION TECHNIQUE மூலம் அனைவரும் எளிதாகவும் தெளிவாகவும் விரைவாகவும் 20 மணித்தியாலங்களுக்குள்ளாகவே (TENSE) ஐ கற்றுவிட முடியும் என்பது இதுவரை கற்ற மாணவர்கள் அனைவராலும் உணர்ந்து ஏற்றுக் கொள்ளப்பட்ட நிதர்சனமான உண்மையாகும்.

மேலதிக விபரங்களுக்கு

திரு. P.T. புனிதராஜா (RESEARCH SCHOLAR)

076 000 3331, 077 773 3404

✦பாடசாலை மாணவர்கள் தற்போதைய விடுமுறைக் காலத்துக்குள்ளாகவே ஆங்கிலத்தை முறையாகக் கற்கக்கூடிய இவ்வரியவாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுங்கள் (1390)


# மரண அறிவித்தல்



திருமதி

## கண்மணியம்மா கணபதிப்பிள்ளை

(கிளியக்கா)

*நீர்வேலி தெற்கு, கந்தசுவாமி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்மணியம்மா கணபதிப்பிள்ளை (கிளியக்கா) 04.12.2019 புதன்கிழமை காலமானார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சோதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் கணபதிப்பிள்ளையின் (இளைப்பாறிய இ.போ.ச சிரேஷ்ட சாலை பரிசோதகர், பருத்தித்துறை, மன்னார், யாழ்ப்பாணம், நீர்வேலி தெற்கு ஸ்ரீசுப்பிரமணிய சனசமூக நிலையத் தலைவர்) பாசமிகு மனைவியும் புண்ணியமூர்த்தி (நோர்வே), கிருஸ்ணமூர்த்தி (லண்டன்), சிவமூர்த்தி (நகுலன்), காலஞ்சென்ற அபிராமி (இ.போ.ச கணக்காய்வாளர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுபத்திரா (நோர்வே), இராஜேஸ்வரி (லண்டன்), செல்வகுமாரி (ஆசிரியர், கிளி/ பரந்தன் அ.த.க.பாடசாலை) ஆகியோரின் மாமியாரும் ஹரிராம், கீரன் (நோர்வே), சஜீதன், லக்சதன், கௌசிதன் (லண்டன்), பவித்திரா, ஹன்சிகா (நீர்வேலி) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.12.2019) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நீர்வேலி தெற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.*

**கணபதிப்பிள்ளை (076 697 3035)**
**சிவமூர்த்தி (076 362 0082)**

(1395)

தகவல்:- குடும்பத்தினர்


## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் முன்னணி **Hotel** ஆன **Tilko Jaffna City Hotel**க்கு பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.

- நிறைவேற்று அறை பராமரிப்பாளர் - Executive Housekeeper
- அறை பராமரிப்பாளர் - Housekeeping attendant
- களஞ்சிய உதவியாளர் - Store assistant
- டெமி செப் - Demi Chef De Partie

அனுபவம் மற்றும் வயதுக்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும்
உணவு மற்றும் தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்

தங்களது சுயவிபரக்கோவையை **17.12.2019**க்கு முன்னர் நேரில் அல்லது கீழ்க் காணும் முகவரிக்கு/மின்னஞ்சலுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தொடர்புகளுக்கு - (1396)

**021 720 0707 / 076 149 8964**

info@tilkohotels.com / anthony52777@yahoo.com

**Tilko Jaffna City Hotel** 70/6, K.K.S.Road, Jaffna



## பண்டிகைக்கால விசேட சலுகை

# JP Motors

உடன் இணைந்து கொண்டாடுங்கள்



**55870/=** ரூபாயினைச் செலுத்தி

புதிய **மோட்டார் சைக்கிள்** ஒன்றினை ஓட்டிச் செல்லுங்கள்

★ 5 வருட உத்தரவாதம்
★ பழைய மோட்டார் சைக்கிளினைக் கொடுத்து புதிய மோட்டார் சைக்கிளினை பெற்றுக் கொள்ளலாம்.

(C-8444)

TVS **077 715 1101, 077 129 0712**


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.12.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.